இலவசப் பிரதி
267, NAVALAR ROAD
JAFFNA

Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



நியாயமான விலையில் தரமான கணனிகளையும்
கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்
Pc Paradise
இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)
TP No. 0777-271220
(சி-158)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 2 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 12 (18.11.2002) திங்கட்கிழமை இதழ் : 49

புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வன், அரச தரப்பில் பேணாட் தலைமை

## புனர்வாழ்வு, அபிவிருத்திக்கான உபகுழு இன்று கிளிநொச்சியில் கூடுகின்றது!

(கிளிநொச்சி)

புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான உபகுழுவின் முதலாவது கூட்டம் இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அரச செயலகத்தில இன்று காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகும் இக்கூட்டத்தில், வட-கிழக்கின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. அரச தரப்பில் அரசின் சமாதான செயலணியின் செயலாளர் பேணாட் குணதிலக, விஞ்ஞானக் கைத்தொழில் மறுசீரமைப்பு அமைச்சின் மூத்த ஆலோசகர் எம்.டி.டி.பீரிஸ், கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் எம்.ஐ.எம்.ராபீக் ஆகியோர் உட்பட மேலும் ஓர் அதிகாரியும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், வே.பாலகுமாரன், கலாநிதி மகேஸ்வரன், நிர்வாகசேவைப் பொறுப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஜெயம் - ஒஸ்ரின் தலைமையில் வவுனியா பாதுகாப்புக் குழுக்கூட்டம்

### ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் நடக்கிறது

(கொழும்பு நிருபர்)

வவுனியா - ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் இன்று காலை பாதுகாப்பு உபகுழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது. கேணல் ஜெயம் தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழுவிற்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான அரச தரப்புக் குழுவுக்கும் இடையில் இப்பேச்சுக்கள் இடம்பெறும்

இக்கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும், இராணுவத் தரப்பில் தொண்டர் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி நெடுந்தீவில் மக்கள் முற்றுகைப் போர்!

## 2ஆவது நாளாகக் கொட்டும் மழையிலும் கடற்படை, பொலிஸ் குவிந்தபோதும் எதிர்ப்பு

(நெடுந்தீவு நிருபர்)

**நெடுந்தீவில் முகாம் அமைக்கவெனச் சென்று தரையிறங்கிய ஈ.பி.டி.பியினருக்கு உதவியாக கடற்படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ள நிலையில் - அங்கிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேறக்கோரி - பெருமளவு மக்கள் ஒன்றுதிரண்டு முற்றுகைப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். துறைமுகத்திற்குள் தற்போது தங்கியிருக்கும் ஈ.பி.டி.பியினர் வெளியேறும்வரை தாம் போராட்டத்தைத் தொடரப்போவதாக அறிவித்துள்ள மக்கள் - நேற்று கொட்டும் மழையிலும் இரண்டாவது நாளாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.**

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் சென்று இறங்கியதையடுத்து அங்கு நடைபெற்றுவரும் பொதுமக்களின் முற்றுகைப் போராட்டத்தினால், நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவைகள் உட்பட அனைத்து வழமையான பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஈ.பி.டி.பியினர் பொலிஸாரின் உதவியுடன் நெடுந்தீவில் சென்று தரையிறங்கியதும் பொதுமக்கள் அவர்களை முற்றுகையிட்டு - முகாமைவிட்டு வெளியேறாமல் தடுத்திருந்தனர்.

இவர்களை நேற்றுக்காலை 9

(10ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியார்



மிதிவெடியளும் எலும்புக்கூடுகளுந் தான் எங்கட மண்ணுல தோண்டத் தோண்டக் கிடைக்கிற புதையல்

## போராட்டத்துக்குப் புலிகளின் ஆதரவைக் கோரும் மக்கள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேறுமாறு கோரி நடத்தப்பட்டுவரும் மக்கள் போராட்டத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவை வழங்கவேண்டும் என்றும் இவ்விடயத்தில் புலிகள் தலையிடவேண்டும் என்றும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணான வகையில் ஈ.பி.டி.பி.யினர் கைகளில் ஆயுதங்களுடன் இருப்பதாகவும் அவர்கள் கத்தி,வாள், பொல்லுகள் போன்ற ஆயுதங்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்ரின் உறுதியளித்தபடி கடற்படை நடக்கவில்லை!

(நமது நிருபர்)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் மீண்டும் ஆயுதங்களுடன் சென்று தரையிறங்கியுள்ளமை தொடர்பாக நேற்றுமுன்தினம் முகமாலையில் நடந்த பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் புலிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவின் கவனத்துக்குக் கொண்டுவந்ததாகத் தெரியவருகின்றது.

இதையடுத்து கடற்படையினர் இத்தகைய நடவடிக்கைகளில் உதவக்கூடாது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அக்கூட்டத்தில் கூறியதாகவும் தெரியவருகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா, பிரிட்டன் தளர்த்தும்!

அமெரிக்காவும் பிரித்தானியாவும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது அல்லது தளர்த்துவது என்ற முடிவுகளை விரைவில் எடுக்கலாம் என அந்நாடுகளின் போக்கிலிருந்து அவதானிக்க முடிவதாகக் கொழும்பிலுள்ள மேற்கு நாட்டுத் தூதரக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய விசேட பிரதிநிதிகளும் இன்றைய கிளிநொச்சி சந்திப்பில்

(கொழும்பு நிருபர்)

சமாதானப் பேச்சுவார்த்தைகள், இலங்கைக்கான நிதியுதவிகள் குறித்து ஆராய்வதற்காக ஜப்பானில் இருந்து விசேட பிரதிநிதிகள் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

இந்த நான்கு உறுப்பினர்களைக் கொண்ட விசேட பிரதிநிதிகள் குழு, இன்று கிளிநொச்சியில் நடைபெறும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான குழுக்கூட்டத்தில் கண்காணிப்பாளர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவில் பதுங்கு குழிக்குள் இரு மனித எலும்புக்கூடுகள்!

(சரசாலை)

சாவகச்சேரி - நுணாவில் மேற்கில் உள்ள காணியொன்றில் இருந்த பதுங்கு குழிக்குள் இருந்து இரண்டு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து வந்த காணியின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்தபோதே இம்மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. பதுங்கு குழிக்குள் எலும்புக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் 117 போராளிகள் பயிற்சி முடித்து வெளியேறினர்!

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட 10ஆவது பயிற்சிப் பாசறைப் பூர்த்தி நிகழ்வும் அணிவகுப்பும் நேற்றுக்காலை அம்பாறையில் இடம்பெற்றது.

மட்டு - அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி த.ரமேஷ் ஈகச் சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

கொமாண்டோ சிறப்புத் தாக்குதல் பயிற்சிகளை முடித்துக் கொண்ட 117 போராளிகள் நேற்று பயிற்சி முகாமிலிருந்து வெளியேறினர். பயிற்சிகளை முடித்த போராளிகளின் பெற்றோரும் கௌரவிக்கப்பட்டனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 517019
(சி-148)

# நாட்டில் இன்றுள்ள கல்வித் திட்டம் புத்திஜீவிகளை உருவாக்கமாட்டாது!

## நீதி அமைச்சர் லொக்குபண்டார காரசாரம்

(கொழும்பு)

நாட்டில் இன்றுள்ள கல்வித்திட்டம், நாட்டுக்குத் தேவையான புத்திஜீவிகளை உருவாக்கப் போதுமானதல்ல என நீதி, புத்தசாசன விவகாரததுறை அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, நாட்டினை முன்னேற்றப் புதிய கல்விச் சீர்திருத்தங்களை மேற் கொள்ளும் போதெல்லாம் - உடனே சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கும் ஜே.வி.பி. - புதிதாக எதனையும் செய்வதற்கு ஆதரவளிப்பதில்லை.

ஆங்கில மொழிவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டபோதும் இவ்வாறான எதிர்ப்பை ஜே.வி.பி. கிளப்பியது. இப்படி எதிர்த்தால் - தகவல் தொழில்நுட்பத்தை நாட்டில் வளர்ப்பது எப்படி? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

### நாவற்குழி கடற்கரை மணற்பிட்டியில்

# சட்டவிரோத மண் அகழ்வு வயல்களுக்குள் உப்பு நீர் அபாயம்

(கொக்குவில் மேற்கு)

நாவற்குழி கடற்கரை மணற்பிட்டியிலிருந்து மண் அகழ்ந்து எடுக்கப்பட்டதால் வயல் நிலங்களில் உப்புநீர் உட்புகக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக நாவற்குழி பகுதியில் சட்ட விரோதமாக மண் அகழ்ந்து எடுக்கப்பட்டு கட்டட நிர்மாணப் பணிக்காக கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் மேட்டுநிலமாக இருந்த பகுதிகளில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

மழைக் காலம் ஆரம்பித்ததை அடுத்து கோவிலாக்கண்டி கடலேரியில் நீர் பெருக்கெடுப்பதால் விவசாயச் செய்கைக்கு உட்படுத்தப்படும் வயல்களுக்குள் உப்புநீர் புகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் கரையோரக் குடிமனைகளும் பாதிப்புக்குள்ளாகும் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (108)

# கோவிலாக்கண்டி வரை பஸ் சேவை ஆரம்பம்

(கொக்குவில் மேற்கு)

நாவற்குழி - கேரதீவு வீதியூடாக கோவிலாக்கண்டிச் சந்திவரை பேருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களின் பின் மக்கள் மீளக் குடியமர்ந்து வரும் இவ்வேளையில் - இல. 808 பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவையை தனங்கிளப்பு ஊடாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு - உரிய அதிகாரிகளை மக்கள் கேட்டுள்ளனர். (108)

## வைத்தியசாலை புனரமைப்பு மதிப்பீடு

(பன்னாலை)

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை புனரமைப்பதற்காக கொழும்பில் இருந்து சுகாதாரக் குழுவும், கட்டட நிர்வாகக் குழுவினரும் வருகை தந்து மதிப்பீடுகளை நிர்ணயித்துள்ளனர். (72)

## கரவெட்டி விக்னேஸ்வரா பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர் வரும் 30ஆம் திகதி - கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் செ.யோகராசா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (17)

## ட்ராக்டரிலிருந்து வீழ்ந்தவர் காயம்

(கொழும்புத்துறை)

உழவு இயந்திரத்திலிருந்து தூக்கி வீசப்பட்டவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோப்பளையில் ஊரி ஏற்றுவதற்காகச் சென்றபோது இடம்பெற்ற இச்சம்பவத்தில் - அதே இடத்தைச் சேர்ந்த க.சிவகுமார் (வயது 18) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். (60)

## இன்றைய நாள் இனிய நாள்

**18-11-2002 - திங்கட்கிழமை**

**சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் - 2ம் திகதி**

*திதி* :- சதுர்த்தசி - பின்னிரவு - 5.53

*நட்சத்திரம்* :- அச்சுவினி - பிற்பகல் - 4.03 வரை அதன்மேல் - பரணி.

*ராகுகாலம்* :- 7.38 - 9.08

*சுபநேரம்* :- 12.08 - 1.38

**மேடம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, உறவினர் நண்பர்கள் வருகை, தெய்வபக்தி, கல்வி நிலை சமம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, மனச்சஞ்சலம், வரவுக்குமிஞ்சிய செலவு, மதிப்புக்குறைவு, எடுத்த காரியம் தடை, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, செய்தொழில் லாபம், விருந்தினர் வருகை, பெண்கள் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழிற்சிறப்பு, பொது சேவையில் மதிப்பு, மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, பிதாவுடன் நல்லுறவு, தெய்வவழிபாடு, கல்வி நிலை சமம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகக் குறைவு, மனச்சஞ்சலம், தேவையற்ற செலவு, புதிய காரியங்களில் ஈடுபடுவது நன்றல்ல, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, பெண்கள் ஆடை அணிவதில் மகிழ்ச்சி, நண்பர்கள் உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பழைய கடன் வரவு, எதிரியின் ஆணவம் குன்றுதல், கல்வி நிலைசமம், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, புத்திர சுகம், பொதுச் சேவையில் கௌரவம், கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**மகரம்** :- தேகசுகக் குறைவு, மனஅமைதி, மாதாவுக்கு சிறிது சுகயீனம், வாகனச் செலவு, தேவையற்ற அலைச்சல், கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, இளைய சகோதர உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம் சமம், மனச்சஞ்சலம், பெண்களால் குடும்பத் தகராறு, வாக்குவாதம், கல்வி நிலை சமம், வியாபார முன்னேற்றம்.


யாழ். மண்ணில் ஓர் நம்பிக்கை நட்சத்திரம்

**I.B.S.** கல்வி நிறுவனம் சுண்டுக்குளி.

தரம் 1 முதல் O/L வரை

புதிய அனுமதிகள்: நவம்பர் 25முதல்

ஆரம்பம்: டிசெம்பர் 5

தரம் 10 வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

(037)



**ராஜா** யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு

அஜித் (இரட்டை வேடம்)

கிரண், மீனா நடித்த

**வில்லன்**

காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30

இயக்கம்: K.S.ரவிக்குமார்.

(சி-151)



**நிறஞ்சனாஸ்** சங்கானை

கமல், சிம்ரன் நடித்த

**மஞ்ச தந்திரம்**

காட்சி நேரம்

11.00, 2.45, 6.00

வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும்

இரவு 8.45 காட்சி

UNIVERSAL SOLDIER

(சி-139)


# விளையாட்டு

### நட்சத்திரங்கள் உதைபந்தாட்டம்

## யூனியன் - ஹென்றியரசர் போட்டியில் விளையாட்டு மைதானத்தில் மோதல்!

(காங்கேசன்துறை)

நேற்றுமுன்தினம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற நட்சத்திரங்கள் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட அணிகளின் - முறையற்ற விளையாட்டைக் கண்டித்து தீர்ப்பு வழங்க மறுத்த நடுவர்- அதிருப்தியாளர்களால் தாக்கப்பட்டார்.

முதலாம் இடத்துக்கான போட்டியில் கலந்து கொண்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரிக்குமான போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி ஒரு கோல் போட்ட நிலையில், இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி - 10 நிமிடங்கள் கழிந்தவேளை வீரர்களின் முறையற்ற விளையாட்டைக் கண்டித்து தீர்ப்பு வழங்க மறுத்த நடுவரை - அதிருப்தியாளர்கள் தாக்கினர். இதனையடுத்து பார்வையாளர்கள் மத்தியிலும் மோதல் இடம்பெற்றது.

பின்னர் போட்டி ஒழுங்கமைப்பாளர்களினாலும், சுன்னாகம் பொலிசாரினாலும் நிலைமை கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு - சமபுள்ளி வழங்கி இரு அணிகளுக்கும் இணை வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் - யூனியன் கல்லூரிக்குமான போட்டியிலும் போட்டி முடிவுறும் நிலையில் குழப்பம் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (71)

# திருத்தப்பட்டு வரும் அரியாலை பொதுச்சந்தை

(அரியாலை)

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் முற்றாகச் சேதமடைந்ததும், பல ஆண்டுகளாக இராணுவத்தினர் நிலைகொண்டு காவலரண்களை அமைத்திருந்ததுமான, அரியாலை தபாற்கட்டைச்சந்திப் பொதுச சந்தை - மாநகரசபையால் திருத்தப்பட்டு வருகிறது.

யாழ். மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையனின் நேரடி மேற்பார்வையின் கீழ் திருத்தவேலைகள் நடைபெறுகிறது. மேற்படி சந்தையின் மையப்பகுதியில் புத்தர் கோயில் ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. தற்போது அது அகற்றப்பட்டு வருகிறது.

எனினும் சந்தையின் முற்பகுதியில் உள்ள கட்டடத்தொகுதியில் பெரிய இராணுவ முகாம் ஒன்று இருப்பது குறிப்பிடத்தக்கது. (55)

## அரியாலையில் சேதமடைந்துள்ள குடிநீர்க் குழாய்கள்

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் குடிநீர் பெறுவதற்காக யாழ். மாநகரசபையின் குடிநீர் வழங்கல் பிரிவால் அமைத்துக் கொடுக்கப்பட்ட குடிநீர்க் குழாய்கள் சேதமடைந்துள்ளதால் குடிநீரைப் பெறுவதில் அப்பகுதி மக்களுக்கு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. (55)

## கற்களைப் பறித்தும் திருத்தப்படாத வீதி

(அரியாலை)

அரியாலை கனகரட்ணம் வீதியை திருத்துவதற்குக் கற்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பறிக்கப்பட்டும் இதுவரை வீதிகள் திருத்தப்படவில்லை.

இதனால் இவ்வீதியூடாக போக்குவரத்துச் செய்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (55)


**வாழ்க வளமுடன்**

**நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

அகவை பத்தில் HAPPY BIRTHDAY



பெயர் : யோ.மிரோஜன்

முகவரி: 173/3, 1ஆம் ஒழுங்கை, அரசடி வீதி.

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**



## மிக முக்கிய அறிவித்தல்

**வலி. மேற்கு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

எமது எல்லைக்குட்பட்ட சகல தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல் 19.11.2002 (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு சண்டிலிப்பாய் அரசியல்துறைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

விடயம் 1. மாவீரர் தின ஏற்பாடுகள்
2. பதிவு ஒழுங்குகள்

குறிப்பு: 1. சங்கீதம், இசை, நடனம், பிரத்தியேக மொழி வகுப்புக்கள், பிரத்தியேக பாட வகுப்புக்கள் கணினி வகுப்புக்கள், உடற் பயிற்சி வகுப்புக்கள் (கராத்தே) உரிமையாளர்களும் கலந்துகொள்ளுமாறு தயவாக வேண்டப்படுகிறீர்கள்.
2. எமது எல்லைக்குட்பட்ட நிறுவனங்கள் பதிவுசெய்யும் இறுதித் திகதியும் 19.11.2002 ஆகும்.

செயலாளர்,
வலி.மேற்கு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.

(038)

# பொலிசாரால் தாக்கப்பட்ட 'ராவய' செய்தியாளர்!

## உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பொலிசார் தன்னைத் தாக்கியமைக்கு எதிராக, சிங்களப் பத்திரிகையான 'ராவய'வின் செய்தியாளர் உவிந்து குருகுலசூரிய உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் - பொலிசார் தன்னைத் தாக்கியதாகவும், சட்டபூர்வமற்ற வகையில் கைது செய்ததாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பொலிசார் ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் வீதியில் தாக்கிக் கொண்டிருந்தனர். அந்த இடத்தில் வாகனத்தை விட்டிறங்கி இது குறித்து விசாரித்தபோது, பொலிசார் - என்னை எதற்காகப் பார்க்கிறாய் என மிரட்டினர்.

நான் ஒரு இலங்கைப் பிரஜை. இந்த விடயத்தை சட்டபூர்வமாகப் பார்ப்பதற்கு உரிமை உள்ளது எனக்கூறி பத்திரிகையாளர் அடையாள அட்டையைக் காட்டினேன். அப்போது பொலிசார் என்னைத் தகாத வார்த்தைகளால் பேசி, என்னைத் தாக்கினார்கள்.

- என ராவய செய்தியாளர் குருகுலசூரிய தெரிவித்துள்ளார்.

என்னைக் கைது செய்த பொலிசார், நான் குடிபோதையில் இருந்ததாகவும், பொலிசாரைத் தாக்க வந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. பின்னர் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டதையடுத்து இது குறிதது பொலிஸ் தலைமையகத்துக்கு முறைப்பாடு செய்ததாகவும் குருகுலசூரிய அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார். சுதந்திர ஊடக இயக்கம் இந்தச் சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளது.

### தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27

மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள்.



வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

### பேச்சுக்கு நடுவே ஒலித்த தொலைபேசி



பதவியேற்று 8 ஆவது வருடப் பூர்த்திவிழாவில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிக்கொண்டிருந்தபோது, பொலிஸ்மா அதிபரின் கைத்தொலைபேசி மணி ஒலிக்க, அதை அவர் நிறுத்தும் ஓர் அபூர்வமான காட்சி இது.

# ஒஸ்லோ மாநாட்டில் இந்தியாவை பங்கேற்கவைக்க மிலிந்த முயற்சி!

(கொழும்பு நிருபர்)

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்தியாவையும் பங்கேற்கவைக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஒஸ்லோ மாநாட்டில் பங்குகொள்வது குறித்து இந்திய அரசாங்கம் இன்னமும் இறுதியான முடிவு எதையும் எடுக்கவில்லை என்றும், இது தொடர்பாக இந்திய அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும், இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியா தனது பலமான ஆதரவைத் தெரிவித்து வருவதாகவும் இலங்கைக்கான உதவி உயர்ஸ்தானிகர் மோகன்குமார் தெரிவித்திருந்தார்.

தற்போது நோர்வே நாட்டுக்கான தூதுவராக உள்ள கோபால கிருஷ்ணகாந்தி ஒஸ்லோ மாநாட்டில் பங்குகொள்ளக் கூடும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆயினும், ஒஸ்லோ மாநாடு தொடர்பாக இந்தியா இறுதி முடிவினை எடுக்காததால், அமைச்சர் மிலிந்த மொறகொடவை புதுடில்லிக்கு அனுப்பி, பேச்சு நடத்த பிரதமர் ரணில் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜப்பானுக்குச் சென்றுள்ள அமைசசர் மிலிந்த மொறகொட, அங்கிருந்து புதுடில்லிக்கு இன்று அல்லது நாளை செல்வார் எனத் தெரியவருகின்றது.

இவர், இந்திய அரசாங்கத்தை ஒஸ்லோ மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்வார் எனவும், இவருடன் நோர்வே நாட்டுத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கும் புதுடில்லி செல்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஒஸ்லோ மாநாட்டுக்கு இந்தியாவின் உயர் மட்டப் பிரதிநிதிகள் குழு செல்லாவிட்டாலும் கூட, விசேட தூதுக்குழுவொன்று உத்தியோகபற்றற்ற முறையில் கலந்துகொள்ளும் என மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

## சூடான தோசை, சுடச்சுடச் சாம்பார் எம்.பிக்களுக்கு கிடைக்குமாம்!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் சூடான தோசையும் சுடச்சுட சாம்பாரும் உண்ணலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிற்றுண்டிச் சாலையில் இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வாரத்தில் இரண்டு நாட்களுக்கு தோசை, இடியப்பம், இட்லி, வடை போன்ற சைவ உணவுகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற விவகார அமைசசர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சைவச்சாப்பாட்டை விரும்பி உண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(01)

# நுணாவில் படைமுகாம் மேலும் விஸ்தரிப்பு

(சாவகச்சேரி)

நுணாவில் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் படையினரால் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. கண்டி வீதியில் பல வீடுகளையும், பொது நிறுவனங்களையும் உள்ளடக்கி அமைந்துள்ள இப்பாரிய முகாமே படையினரால் மேலும் புதிய எல்லைகள் போடப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

புதிதாக விஸ்தரிக்கப்பட்ட எல்லைகளைச் சுற்றி, முட்கம்பி வேலிகள் தொடராக இணைக்கப்பட்டு - கூரைத் தகடுகள், பாரிய தகரங்கள், மரங்கள் கொண்டு முகாம் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் குடியிருப்புக்கள், காணிகள் என்பவற்றிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டுவரும் வேளையில், படையினர் முகாம்களை அமைத்து எல்லைகளை விஸ்தரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(29)

# இலங்கை - இந்திய கடற்பகுதியை நோட்டமிட புதிய போர்க்கப்பல்

## இந்தியா கொள்வனவு செய்யவுள்ளது

(கொழும்பு நிருபர்)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பைக் கண்காணிப்பதற்காக, இந்தியா அதிநவீன போர்க்கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்யவுள்ளது.

இலங்கையில் - அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் தலையீடுகள் அதிகரித்து வருவதாலேயே இந்தியா இந்த முடிவினை எடுத்திருப்பதாக இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய - இலங்கை கடற்பரப்பில், தனது ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இக்கப்பலைக் கண்காணிப்பில் ஈடுபடுத்து வதென இந்தியத்தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரடார் திரையில் தென்படாத ஸ்ரெல்த் ரகத்தைச் சேர்ந்த போர்க்கப்பலை ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளிலும் இந்திய அரசாங்கம் இறங்கியுள்ளது.

(01)

### ரமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.57 |
| பஜ்ர் | 5.12 |
| உதயம் | 6.32 |
| ளுஹர் | 12.27 |
| அஸர் | 3.49 |
| மஃரிப் | 6.20 |
| இஷா | 7.33 |

# மா விலை அதிகரிப்புக்கு பொ.ஐ.முவே காரணமாம்!

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்தின் கீழிருந்த மா ஆலை 60 மில்லியன் ரூபாவுக்கு தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டதின் காரணமாக மாவின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மாவின் விலை - கிலோகிறாம் ஒன்றுக்கு ஒரு ரூபா 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டதால், மாவைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பண்டங்களின் விலை அதிகரித்திருப்பதாகவும் வர்த்தக அமைச்சர் மேலும் கூறுகிறார்.

# கட்டாய மதமாற்ற தடைச் சட்டத்திற்கு பௌத்த கலாசார அமைச்சும் ஆதரவு!

## ஜனவரியில் நாடாளுமன்றில் தாக்கலாம்

(கொழும்பு நிருபர்)

கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மதமாற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் இதனைத் தடுப்பதற்காகவே இச்சட்டம் கொண்டுவரப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதை மீறி மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுயவிருப்பின் அடிப்படையில் இடம்பெறும் மதமாற்றங்களை இச்சட்டம் தடுக்காது எனவும் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலத்துக்கான வரைவுகள் தயார்செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இந்து கலாசார அமைச்சுக்கு, கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தைக் கொண்டு வருவதற்கு பௌத்த கலாசார அமைச்சும் தீவிரமான ஆதரவினை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

# பேச்சுக்கான நோர்வேயின் பங்களிப்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்

## பிரித்தானிய பிரபுக்கள் சபை உறுப்பினர்

(கொழும்பு)

நோர்வே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனது பங்களிப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டனின் பிரபுக்கள் சபை உறுப்பினரான லோர்ட் நெஸ்பை தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் பங்களிப்பு அரசுக்கோ புலிகளுக்கோ சார்பாக இருக்கவில்லை. நேர்மையாக இருக்கும் பட்சத்தில் சமாதான முயற்சிகள் வெற்றிபெறும்.

விடுதலைப் புலிகள் இதுவரை சமாதான முயற்சிகளில் நேர்மையாக உள்ளனர். நோர்வே விடுதலைப் புலிகளுக்கு சார்பாக உள்ளதென்று நான் கருதவில்லை என்று நெஸ்பை பிரபு மேலும் குறிப்பிட்டார்.

## தனியார் பாதுகாப்பு சேவையில் இராணுவத்தினர்

(கொழும்பு நிருபர்)

இராணுவத்தில் மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள ஒருவரின் மனைவியால் நடாத்தப்படும் தனியார் பாதுகாப்புச் சேவையில் படையினர் மூவர் கடமையாற்றி வருகின்றனர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இராணுவப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடமை நேரத்தில் எவ்விதம் இச்சேவையாற்றுதல் நடந்தது என்பது பலரையும் வியப்பிலாழ்த்தியுள்ளது.

# பல்லப்பை முகாமுக்கு எம்.பிக்கள் விஜயம்

(வடமராட்சி கிழக்கு)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆ.விநாயகமூர்த்தியும், கஜேந்திரகுமாரும் பல்லப்பை இராணுவ முகாமிற்கு விஜயம் செய்து அப்பகுதியிலுள்ள வீடுகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

புலோலி பல்லப்பையைச் சேர்ந்த 24 குடும்பங்கள் தங்கள் வீடுகளை இராணுவத்தினரிடமிருந்து மீட்டுத் தரும்படி தமிழ் காங்கிரஸ் தலைவருக்கு மகஜர் அனுப்பியிருந்தமை தொடர்பாக ஆராயவே இவர்கள் இவ் விஜயத்தை மேற்கொண்டனர். (17)

## நிதியுதவிகள் தொடர்பாக ஆராய

# அமைச்சர் மிலிந்த ஜப்பானுக்கு விஜயம்

(கொழும்பு நிருபர்)

அரச - புலிகள் தரப்பு சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம் பெற்றுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்றுமுன்தினம் இரவு ஜப்பானுக்குச் சென்றுள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஜப்பான் வழங்கவுள்ள நிதியுதவி தொடர்பாக ஆராயவே அமைச்சர் மிலிந்த மொறகொட ரோக்கியோவுக்குச் சென்றுள்ளார் எனத் தெரியவருகின்றது.

உதவி வழங்கும் நாடுகளில் அதிகளவான நிதியுதவியை ஜப்பானே வழங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இத்தாலிக்கான வேலைவாய்ப்பில் வட-கிழக்கு இளைஞருக்கு முன்னுரிமை

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இத்தாலியில் வழங்கப்படவுள்ள வேலைவாய்ப்பில் வட - கிழக்கைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இலங்கையர்கள் ஆயிரம் பேருகது இத்தாலிய அரசு தனது நாட்டில் வேலை வழங்க முடிவு செய்திருப்பதையிட்டே, மேற்கண்ட தகவலை தொழில் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆயிரம் இலங்கையருக்கு இத்தாலி நாட்டில் வேலைவாய்ப்பு வழங்கியதால், முழு ஆசியாக்கண்டத்திலும் உள்ள நாடுகளில் இலங்கைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய ஐரோப்பிய நாடுகளில் பிரவேசிப்பதற்கு இதன் மூலம் வாயில் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து உட்பட பல ஐரோப்பிய நாடுகளிலும் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விமான டிக்கட் மற்றும் இரண்டு மாதப் பயிற்சிகளுக்காக மட்டும் பணம் அறவிடப்படும். டிக்கட்டுக்காக 75 ஆயிரம் ரூபாவும் மொழிப் பயிற்சிக்காக 7 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படவிருக்கின்றது. ஏனைய செலவுகள் யாவும் அரசாங்கமே பொறுப்பேற்கும் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க புதிய வாய்ப்புப் பற்றி மேலும் கூறினார்.

# உயர் நீதிமன்றத்தில் வை.கோ. ஆட்சேபனை மனுத் தாக்கல்!



(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ இந்திய உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

வேலூர் சிறைச்சாலைக் கண்காணிப்பாளர் ஊடாக இந்த ஆட்சேபனை மனுவை வைகோ உயர்நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மனுவை 11ஆம் திகதி உயர்நீதிமன்றப் பதிவாளர் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு இயக்கத்துக்கு ஆதரவாக ஆதரவு தெரிவிப்பது வன்முறையைத் தூண்டும் செயலாகாது என்றும்,

பேச்சுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் 'பொடா' சட்டத்தின் 21 ஆவது பிரிவு செல்லுபடியாகாது என நும் அவர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மீசாலையில் இலவச கணினி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பு வழங்கும் - ஆசிரியர்களுக்கான இலவச கணினிக் கருத்தரங்கு நாளை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அமைப்பின் தொடர் கருத்தரங்குகள் குடாநாட்டின் பல இடங்களிலும் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(136)

## சமாதான முயற்சிகளுக்கு எதிரான அறிவிப்பு

# சரத் அமுனுகமவின் அறிக்கையால் பொ.ஐ.முன்னணிக்குள் முரண்பாடு!

(கொழும்பு நிருபர்)

தற்போது அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக பொ.ஐ.முவின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம வெளியிட்ட கருத்து தொடர்பாக பொ.ஐ.முவில் உள்ள கூட்டணிக்கட்சியினருக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

சமாதான முயற்சிகள் தொடர்பாக பொ.ஐ.முவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் அதிகாரம் சரத் அமுனுகமவுக்கு வழங்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக தம்முடன் கூடி ஆலோசிக்கப்படவில்லை எனவும் லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என்பன அறிக்கை வெளியிட்டுள்ளன.

சரத் அமுனுகமவால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கும் தமக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்றும், அவர் வெளியிட்ட கருத்து தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம் எனவும் லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் மற்றும், கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் குணவர்த்தன ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் எதிரான கருத்தைக் கொண்டிருக்காத போதும், பொ.ஐ.முவின் பெயரால் தம்முடன் கலந்தாலோசிக்காமல் கருத்து வெளியிடுவதற்கு சரத் அமுனுமவுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் எதிரான கருத்தைக் கொண்டிருக்காதபோதும், பொ.ஐ.முவின் பெயரால் தம்முடன் கலந்தாலோசிக்காமல் கருத்து வெளியிடுவதற்கு சரத் அமுனுகமவுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஆசியாவின் பெரிய பஸ் நிலையம் சென்னையில் இன்று திறப்பு!

(சென்னை)

ஆசியாவிலேயே மிகப் பெரிய, அதி நவீன பஸ் நிலையம் இன்று சென்னையில் திறந்து வைக்கப்படும்.

இந்த பஸ் நிலையத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா திறந்து வைக்கவுள்ளார்.

சுமார் 103 கோடி இந்திய ரூபாவில் 36.5 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்ட, இந்த பஸ் நிலையத்தில் ஒரேநேரத்தில் 270 பஸ்களை நிறுத்தி வைக்கப்படக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் வசதிக்காக 3 பெரிய உணவகங்களும் 3 சிறிய உணவகங்களும் இந்தப் பேருந்து நிலையத்தில் இயங்கும், மேலும் 31 சிறிய கடைகளும் கட்டப்பட்டுள்ளன.

18 ஆயிரம் சதுர அடிப்பரப்பில் பயணிகள் காத்திருக்கும் கூடமும் 3000 இற்கு மேற்பட்ட பயணிகள் அமர்வதற்கான இருக்கைகளும்,15 குடிநீர்க் குழாய்களும் 60 கழிப்பிடங்களும் இந்த நிலையத்தில் கட்டப்பட்டுள்ளன.

மேலும் 10 ஆயிரம் சதுர அடி பரப்பில் ஓட்டோ நிறுத்துமிடங்களும், 15 ஆயிரம் சதுர அடிப்பரப்பில் கார்கள் நிறுத்துமிடங்களும், இரு சக்கர வாகனங்களுக்காக 16 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பயணிகள் வசதிக்காக 3 பாதுகாப்பு அறைகளும், 60 தொலைக் காட்சி பெட்டிகள் அமைப்பதற்கான இடமும், 10 பயணிகள் முகவர் இடங்களும் கட்டப்பட்டுள்ளன.

## ஆபாசப்படம் பார்த்தோர் சிக்கினர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வீடொன்றில் ஆபாசப் படம் பார்த்த சிலரை சமூகச் சீர்திருத்தக் குழுவினர் எச்சரித்து விடுவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இதேவேளை - கரம்பன் பகுதியில் பசுமாடு ஒன்றைத் திருடி இறைச்சிக்காக வெட்டிய சிலரையும் சமூக சீர்திருத்தக்குழு புலிகளிடம் ஒப்படைத்துள்ளது. (51)

## ஊரெழுவில் வாள்வெட்டுக்கு ஒருவர் காயம்

(சுன்னாகம்)

ஊரெழு மேற்கில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் - அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சிறிரஞ்சன் என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொலைக்காட்சி பார்ப்பதில் சிறுவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பே இதற்குக் காரணம் எனத் தெரியவருகின்றது. (87)

# கப்பல் சரக்கு நிலையம் தெல்லிப்பளையில் திறப்பு!

(மல்லாகம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் கைத்தொழிற்பொருட்களை தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யவும், அங்கிருந்து பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிக்கவும் ஏற்றவகையில் - தெல்லிப்பளையில் "றெப்கன் கப்பல் சரக்கு நிலையம்" ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முதன்முதலாக தெல்லிப்பளையில் அமைக்கப்பட்ட இந்நிலையத்தை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல் திறந்து வைத்தார்.

தொடர்ந்து நிலைய உரிமையாளர் றொகான் தளுவத்த உரையாற்றும்போது - இந்நிலையத்தினூடாக ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகள் சீராக நடைபெறுவதோடு எமது பிரதேச இளைஞர்களுக்கும் இதன் மூலம் வேலைவாய்ப்பு வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்விழாவில் ஆசிரியர் திருமதி ம.இராமநாதன் மற்றும் "நமது ஈழ நாடு" நிறுவன நிர்வாக இயக்குநர் சிவமகாராசா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தற்போது தரைமார்க்கமாகவே சரக்குகள் பரிமாறும் பணி நடைபெறும் எனவும் உரிய கப்பற் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதும் கப்பல் மூலமாக விநியோகப் பணிகள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(68)

## காவல்துறை வாகனத்தில் ஓய்வெடுக்கும் சிப்பாய்!



முகமாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது எமது செய்தியாளரின் கமராவில் சிக்கியது இக்காட்சி. (படம்: லிவிங்ஸ்ரன்)

# 'நமது ஈழநாடு' இலவசப் பிரதிகள் பெறும் சனசமூக நிலையங்கள்

'நமது ஈழநாடு' இலவசப் பிரதித் திட்டத்தின் கீழ் ஒரு மாதத்துக்கு இலவசப் பிரதியைப் பெறும் 50 சனசமூக நிலையங்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பின்வரும் சனசமூக நிலையங்கள் தமது இலவசப் பிரதியை 20ஆம் திகதி முதல் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருந்த முகவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

1. பிரான்பற்று, சரஸ்வதி சனசமூக நிலையம்
2. கொக்குவில் - கேணியடி, கலைமகள் சனசமூக நிலையம்
3. ஊறணி, வல்வெட்டித்துறை காந்தி சனசமூக நிலையம்
4. தொல்புரம் கிழக்கு, காந்தி சனசமூக நிலையம்
5. பன்னாலை, கணேச சனசமூக நிலையம்
6. தெல்லிப்பளை, அண்ணா சனசமூக நிலையம்
7. புத்தூர், கலைமதி சனசமூக நிலையம்
8. அல்வாய், இளம்பிறை சனசமூக நிலையம்
9. கொக்குவில் மேற்கு, பிடாரி சனசமூக நிலையம்
10. வதிரி, வட்டுவத்தை சனசமூக நிலையம்
11. இளவாலை, புனித யூதாதேயு சனசமூக நிலையம்
12. உடுவில், நாச்சியம்மன் சனசமூக நிலையம்
13. சுழிபுரம், நாவலர் சனசமூக நிலையம்
14. சுன்னாகம், தமிழ்ஒளி சனசமூக நிலையம்
15. பருத்தித்துறை, நாவலர் சனசமூக நிலையம்
16. சாவகச்சேரி, சாரதா சனசமூக நிலையம்
17. கைதடி, விநாயகர் சனசமூக நிலையம்
18. கொழும்புத்துறை சனசமூக நிலையம்
19. சாவகச்சேரி, மீசாலை வடக்கு சனசமூக நிலையம்
20. பருத்தித்துறை, சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்
21. செல்வாபுரம், இளங்கோ சனசமூக நிலையம்
22. சங்கானை, ஐக்கிய சனசமூக நிலையம்
23. பருத்தித்துறை, திருவள்ளுவர் சனசமூக நிலையம்
24. நீர்வேலி மேற்கு, கலைவாணி சனசமூக நிலையம்
25. கோண்டாவில் மேற்கு, அமரகவி சனசமூக நிலையம்
26. குருநகர் சனசமூக நிலையம்
27. சுன்னாகம், ஐயனார் சனசமூக நிலையம்
28. தும்பளை மேற்கு சனசமூக நிலையம்
29. யாழ்ப்பாணம், திருவள்ளுவர் சனசமூக நிலையம்
30. வட்டுக்கோட்டை, தாவளை சனசமூக நிலையம்
31. அச்சுவேலி, தோப்பு சனசமூக நிலையம்
32. கோண்டாவில், வளர்பிறை சனசமூக நிலையம்
33. மானிப்பாய், கட்டுடை சனசமூக நிலையம்
34. ஏழாலை மேற்கு, லெனின் சனசமூக நிலையம்
35. இளவாலை, புனித கயித்தார் சனசமூக நிலையம்
36. இருபாலை கிழக்கு, ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்
37. மூளாய், இந்து இளைஞர் மன்றம் சனசமூக நிலையம்
38. சுதுமலை மத்திய சனசமூக நிலையம்
39. ஓட்டுமடம், கலைவாணி சனசமூக நிலையம்
40. கொக்குவில், தலையாழி இந்திரா சனசமூக நிலையம்
41. ஈச்சமோட்டை சனசமூக நிலையம்
42. கோண்டாவில், ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்
43. ஆவரங்கால் மேற்கு, விவேகானந்தா சனசமூக நிலையம்
44. வியாபாரிமூலை, கலைமணி சனசமூக நிலையம்
45. நல்லூர், முருகன் சனசமூக நிலையம்
46. காரைநகர், கங்கைமதி சனசமூக நிலையம்
47. வட்டுக்கோட்டை, ஐக்கிய நாணய சங்க சனசமூக நிலையம்
48. இடைக்காடு, மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்
49. அரியாலை, ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்
50. வரணி, சிறிகணேசா சனசமூக நிலையம்



# இலக்கியச் சோலை

## A-9 என நீளும் நினைவுகள்



### பகுதி ஆறு

ஆனைஇறவின் 'கபாடம்' "எண்பத்தெட்டில்"
அகலத் திறந்தே கிடந்தது! ஆயினும்
சோதனைகளால் வேதனை நீண்டது.
சொகுசுப் பயணம் 'முடவன் நடையாச்சு'!
பார ஊர்திகள் தடைமுகாம் வாசலில்
படுத்திருந்தன வாரக் கணக்கிலே.....!
சீர்படுத்திய தண்டவாளங்களால்
சிறிது காலம் யாழ்தேவியும் ஓடிற்று

வழிமறிப்பு, வழிப்பறி, தீக்கிரை
வாகனத்தோடு கடத்தப்படல், விடல்,
பழைய வேதாளம் முருங்கையில் ஏறிற்று!
பாதையோரத்தில் காலநேரமற்று
விழுந்தது எறிகுண்டு.... கிளைமோர்கள்
வெடித்தன....;உயிர்போதல், இரணப்படல்
தளைத்தன; பழிவாங்கலால்... வீதியில்
தலை குனிந்தபடி பட்டான் தமிழ்மகன்.

வன்னியின் பெருங்காட்டைத்தம் கைகளுள்
மடித்து...."செக்-மேற்"கள் செய்தனர் இந்தியர்.
குண்டையும் கர்ணன் போறதான் பொழிந்தனர்.
கூர்க்கா, சீக்ஸ், பரா வீரர் முகில்கள்போல்
மின்னி முழங்கினர். ஆயினும் போர்த்திறம்
வியூகம், ஆன்ம பலத்தோ டெதிர் கொண்ட
'சின்னப்பொடியள்' முன் புறமுதுகிட்டனர்.
'தெரு' மருத்துவத் தாதியாய் மாறிற்று.

- ஜெயங்கொண்டான்

## யார் அறிவார்..?

நெருஞ்சி முட்கள் மெத்தையாய்
விரிந்த தரையில் கிடத்தி
பார்
வானத்தை என்ற போது ~
நட்சத்திரங்கள்,
எம் மண்ணைப் பிடித்த
அழுக்குக் கொப்பளங்களாய்த் தெரிய
முதுகு முள் வலித்தது.
பிடுங்க முனைந்த போது
கைகளும் கண்களும்
கட்டி நடத்தப்பட்டேன்.
யார் அறிவார்
என் விடுதலையை....?

நவகலையான்
துறையூர்

# உள்வெளி

**ஒளவையார்** நம்மிற் பலர் அறிந்த ஒருவர்தான்!

இப்பெயரைக் கேட்டவுடனேயே கையில் கோல், நெற்றியில் திருநீறு என்பவற்றுடன் மூதாட்டி ஒருவரின் தோற்றம் நமது மனதில் தோன்றும்; தொடர்ந்து 'ஆத்திசூடி', 'கொன்றை வேந்தன்', 'வாக்குண்டாம்', 'நல்வழி' முதலிய நூல்களும் சிலருக்கு நினைவுக்கு வரும்.

ஆனால், '**ஒளவை**' என்ற பெயரில் ஒரு புலவர் அல்லாது பலர் இருந்துள்ளதாகத் தற்போதைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன!

இந்த ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு, புதிய நோக்கில் கவிஞர் 'இன்குலாப்' எழுதிய 'ஒளவை' நாடகம், நூல் வடிவில் வெளிவந்திருக்கிறது. நூலின் முன்னுரையில், "ஒளவையைப் பற்றித் தமிழ்ச் சிந்தனையில் திணிக்கப்பட்ட பிரமையை உடைக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே நாடகம் எழுதுவது பற்றிச் சொன்னேன். வெவ்வேறு காலங்களில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் ஒளவைகளைக் கலவையாக்கி ஒரே ஒளவையாக்கித் தந்தார்கள்; அல்லது வேறுபட்ட காலங்களில் வாழ்ந்த பெண் புலவர்கள், ஒளவை என்ற பெயரில் தங்களை அழைத்துக் கொண்டதாகவும் ஆய்வாளர் சுட்டுவர். இந்தக் கலவையில் ஆடவர்களைப் பற்றிக் கவலைப்படாதிருந்த சங்ககால ஒளவை தொலைந்து போய்விட்டாள். ஆடவரின் ஆதிக்கங்களை அறநெறிகளாக ஏற்றுக்கொண்ட பிற்கால ஒளவைகள் முன்னிறுத்தப்பட்டனர். ஒளவை ஒளவையாராக மாற்றப்பட்டாள். இந்த மாயைகளை உடைத்து தொல் ஒளவை மீட்கப்பட வேண்டும்......" என்ற வரிகளில் தமது நோக்கத்தினை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

'மௌனக் குரல்' என்ற அமைப்பு, 'அ.மங்கை'யின் நெறியாள்கையில், தமிழ்நாட்டின் பல இடங்களில் இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறது.

இந்த நாடகத்தின் 'விடியோ'ப் பிரதி (35 நிமிடங்கள்), யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரால், 6.11.2002 இல் காட்டப்பட்டது; காட்சியினைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெற்றது.

கருத்துத் தெரிவித்த மாணவரிற் பலர், நாடகத்தை விளங்க முடியவில்லை எனக் குறிப்பிட்டனர்; நாடகப் பிரதியினை வாசித்தபோது ஏற்பட்ட தாக்கத்தினை 'விடியோ'ப் பிரதி தரவில்லையென, வேறு சிலர் தெரிவித்தனர்.

கலாசாரச் செயற்பாட்டாளரான 'அ.யேசுராசா', "நான் நாடகப் பிரதியை வாசிக்கவில்லை,'விடியோ' பிரதியின் மூலமாக நாடகத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியவில்லை; படமாக்கப்பட்ட முறையும் நன்றாக அமையவில்லை. அத்தோடு, நாடகத்தில் பாடப்படும் பாடல்கள் ஒத்திசைவுடன் இனிமையானவையாக இருக்கவில்லை" என்றார்.

'குழந்தை சண்முகலிங்கம்' அவர்களும் இதே மாதிரியான கருத்துக்களைத் தெரிவித்ததோடு, 'விடியோ' பிரதியை வைத்து ஒரு நாடக அறிக்கையை நாம் சரியாக மதிப்பிட முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

விரிவுரையாளர் 'ரதீதரன்', "நாடகத்தின் சில பகுதிகள்தான் 'விடியோ'வில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன; குறைபாட்டிற்கு அதுவும் ஒரு காரணம். மேலும், மேடை நாடகமொன்றை அதன் 'விடியோ' பிரதியை வைத்து மதிப்பிடப் கூடாதுதான்" என்றார்.

விரிவுரையாளர் 'தேவானந்', இருபது ஆண்டுகளின் முன்னரே இங்கு நிகழ்த்தப்பட்ட நாடகமுறைகளைப் போன்றவற்றை இந்த நாடகத்தில் காணமுடிவதாகவும், சிறிது காலத்தின் முன்னர் இங்கு வந்த ஒரு ஆங்கில நாடகவியலாளர் சொன்னவை, பத்து ஆண்டுகளின் முன்னரே இங்கு செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். அத்துடன், எமது முக்கிய நவீன நாடகங்களும் 'விடியோ'வில் ஆவணப்படுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

விரிவுரையாளர் 'க.சிதம்பரநாதன்', "தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான நாடகக்காரர் சம்பந்தப்படுவதால், சமகால தமிழக நாடகங்களின் தரத்தினை மதிப்பிடுவதற்கும், பெண்ணிய நாடகங்களை மதிப்பிடுவதற்கும் இது உதவும். இந்த நாடகத்தின் பொருள் பெண்ணியம் சார்ந்ததாக உள்ளது. பின் நவீனத்துவ முறையில் கட்டவிழ்த்தால், ஆணாதிக்கம் அதற்குப் பின்னால் உள்ளது. ஓர் இளம் பெண் அறிவுபூர்வமாகக் கதைக்க முடியாது; எல்லா இடங்களிலும் திரிய முடியாது; அதனாலே தான் வயது கூடிய 'ஒளவையாரை' முன்னிறுத்தியிருக்கிறார்கள்" எனச் சொன்னார்.

மேடை நாடகமொன்றை விவரணத் திரைப்படமாகவோ 'விடியோ' பிரதியாகவோ உருவாக்குதல், பிறிதொரு படைப்பாக்க முறையாகும். நாடக நெறியாளரும் படப்பிடிப்பாளரும் இணைந்து, பொருத்தமானதொரு 'தொழில் நுட்பப் பிரதி'யைத் தயாரித்துச் செயற்படவேண்டும்; அவ்வாறானால்தான் நாடகத்தின் உயிர்ப்பினைத் தக்கவைக்க முடியும்.

ஏற்கனவே, எமது முக்கிய நவீன நாடகங்கள் சிலவற்றை 'விடியோ'வில் பதிவுசெய்யும் முயற்சிகள் இங்கு நடைபெற்றுள்ளபோதிலும், அவை திருப்திகரமாக அமையவில்லை!

உதாரணமாக, எழுபதுகளின் பிற்பகுதியில் 'அவைக்காற்று கலை கழகத்'தால் , 'க.பாலேந்திரா'வின் நெறியாள்கையில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட - புகழ் பெற்ற இந்திமொழி நாடகாசிரியர் 'மோகன் ராகேஷ்' எழுதிய - 'அரையும் குறையும்' என்ற நாடகம் அரங்கில் சிறப்பானதாய் இருந்த போதிலும், 'விடியோ' வில் நன்றாக வரவில்லை! ஆனால், இதே குழுவினால் மேடையேற்றப்பட்ட - 'ரென்னசி வில்லியம்' எழுதிய - 'கண்ணாடி வார்ப்புகள்', 'ரூபவாஹினி' தொழில்நுட்பக் கலைஞர்களால் நன்றாகப் பதிவு செய்யப்பட்டு, தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

எனவே, எமது முக்கிய நாடகங்களை 'விடியோ' வில் ஆவணப்படுத்தும் போது, தகுதிவாய்ந்த தொழில்நுட்பக் கலைஞர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுவது இன்றியமையாததாகும்!

- சூரி -

# உலகியலை வெறுத்தனரா? உண்மையைப் பாடினரா?

## சித்தர்களின் சிந்தனைப் போக்கு - சில குறிப்புக்கள் -

ஈ.குமரன்
B.A (Hons)

தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் சித்தர்கள் பலர் பல்வேறு கால கட்டங்களிலும் வாழ்ந்திருக்கின்றனர். கி.பி.10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலரே எமக்கு முதன்முதலாக அறியவரும் சித்தராவார். அவருக்குப்பின் எத்தனையோ பல சித்தர்கள் இன்று வரை வாழ்ந்திருக்கின்றனர். 'சித்தர்' என்பதற்குப் 'பதிணெண் கணத்துள் ஒரு சாரர்', 'பூரண அருளை அடைந்தோர்', 'அஷ்டமா சக்திகளை அடைந்தோர்' எனத் தமிழ் 'லெக்சிகன்' பொருள் கூறுகிறது. இச்சித்தர்கள் அருளியதான பாடல்கள் இன்று தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. அதேபோலவே, அறியப்பட்ட சில சித்தர்களின் வரலாறுகளும் நூல் வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றின் பின்னணியில் சித்தர்களின் சிந்தனைப் போக்குகள் பற்றிய சில குறிப்புக்களைத் தர முனைகின்றேன்.

பொதுவாகச் சித்தர்கள் அவர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் ஒரு 'வித்தியாசமான' மனிதர்களாகவே கருதப்பட்டனர். இதற்கு நிறையக் காரணங்கள் உள. குறிப்பாகச் சாதாரண உலகியல் வாழ்க்கையோடு அவர்கள் ஒட்டாமல் வாழ்ந்த நிலை அவர்களைப் பைத்தியக்காரர்களாக நினைக்கத் தூண்டிற்று. ஆயினும் அவர்களிடம் காணப்பட்ட சில அபரிமிதமான சக்திகள் மக்களை அவர்களிடம் பயமும் பக்தியும் கொள்ளச் செய்தது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

சித்தர்களின் இவ் உலகியலை வெறுத்த அல்லது அதனோடு ஒட்டாத வாழ்க்கையானது, அவர்களின் நிறைந்த ஆய்வறிவுப் போக்கினாலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். தாங்கள் வாழ்ந்த சமுதாயத்தை ஒரு 'வித்தியாசமான கோணத்தில்'-புறநிலையாக அவர்கள் பார்த்திருக்கின்றனர். பல நூற்றாண்டுகளுக்குப் பின் இன்று கருக்கொண்டு வளர்ந்து வரும் இப்பார்வை இவர்களுக்கு அன்றே கிடைத்திருப்பது ஒரு வியக்கத்தக்க சம்பவமாகவே உள்ளது. இவ் ஆய்வறிவும் பார்வையால் தாங்கள் வாழ்ந்த சமுதாயத்தை அவர்கள் ஆராய முயன்றிருக்கின்றனர். சமுதாயத்தில் முனைப்புற்றுக் காணப்பட்ட பல்வேறு மூடநம்பிக்கைகள், அடக்குமுறைகள் என்பன அவர்களை அவற்றுக்கெதிராகப் பேசவும் செயற்படவும் வைத்தன. அறிவியல் சிந்தனை வளராத அக்காலப்பகுதியில் அவர்களது பேச்சுக்களும் செயற்பாடுகளும் பைத்தியக்காரத் தனமானதாக இனங்காணப்பட்டதில் வியப்பில்லை. தங்களை; தங்கள் சிந்தனைகளை மக்களால் புரிந்து கொள்ள அல்லது உள்வாங்கிக் கொள்ள முடியாதிருக்கும் சமூகச் சூழலில் அவர்கள் ஆரவாரம் இன்றி விலகி வாழத்தொடங்குகின்றனர். பதிலாகத் தங்கள் கருத்துக்களை அவர்கள் மாற்றிக் கொள்ள முனையவில்லை. தங்களது சமுதாயத்தில் தாங்கள் அந்நியமாகிப் போகும் நிலையையிட்டு அவர்கள் கலங்கவுமில்லை.

சித்தர்களிடம் முற்போக்கான பல செயற்பாடுகளும் சிந்தனைகளும் காணப்பட்டன. சாதி எதிர்ப்பு, மத ரீதியான மூடநம்பிக்கைகளை எடுத்துரைத்தல், அவற்றில் நின்று விடுபடவேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டல் போன்ற முற்போக்கான சிந்தனைகள் அவர்களிடம் இருந்தன. அவர்கள் வாழ்ந்த காலச் சமுதாயம் சாதி ரீதியான பல பாகுபாடுகளுக்கு உள்ளாகியிருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் பல கொடுமைகளுக்கு ஆளாகிக் கொண்டிருந்தனர். அவர்களது பல உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. இந் நிலவுடைமைச் சமுதாய சாதி அமைப்புக்கு எதிரான கருத்துக்களைச் சித்தர்கள் எடுத்துரைத்தனர். விரும்பியோ விரும்பாமலோ நிலவுடைமைச் சக்திகளுக்கு எதிராகத் துணிந்து குரல்கொடுத்த தீரம் சித்தர்களுக்குத் தனிக் கவனிப்பைப் பெற்றுத்தருகின்றது. சொந்த முதுகெலும்பில் நிமிர்ந்து நின்று அதிகார வர்க்கத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கத்தக்க ஆற்றலை அவர்கள் பெற்றிருந்தனர்.

அதேபோலவே மதரீதியான மூட நம்பிக்கைகளுக்கு எதிராக அவர்கள் எழுப்பிய குரலும் முக்கியத்துவம் பெற்றதொன்றாகும். மதம் என்ற போர்வைக்குள் அதிகார சக்திகளின் அருபகரங்கள் அழுத்தங்களைப் பிரயோகிப்பதை அறிந்து, அவை களையப்பட வேண்டும் என்ற குரலை எழுப்பியவர்கள் இவர்கள். விக்கிரக வழிபாடு, பூசைகள், வேள்விகள், சமயச்சடங்குகள் என்பனவற்றை மறுதலிப்பனவாகவே அவர்களது பாடல்கள் அமைந்தன., ஆனால் அவர்கள் தெய்வநம்பிக்கையை மறுதலிக்கவில்லை. அடிப்படையில் அவர்களும் ஆன்மீகவாதிகளே. ஆனால் தெய்வத்தின் பெயரைச் சொல்லி நடைபெறும் அலங்கோலங்களைக் காண, கேட்க அவர்களால் சகிக்க முடியவில்லை. ஆண்டவனை உருவவடிவில் காண்பதற்குப் பதில் மனதில் சோதி வடிவாக அவர்கள் கண்டு வணங்க முற்பட்டனர். குணங்குறிகளற்ற எங்கும் நிறைந்த ஒரு சக்தியாகவே ஆண்டவனைக் கண்டு, மனத்திருத்தி அவர்கள் வழிபட்டனர்.

'நிலையாமை' என்னும் தத்துவம் இந்திய சமயங்கள் பலவற்றினால் முன்வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக ஜைன, பௌத்த மதங்களின் பரம்பலோடு இத் தத்துவக் கருத்துக்கள் கூர்மையடைந்தன. 'உலகம் பொய், உலக வாழ்வு பொய்' என்றெல்லாம் பல தத்துவ நிலைப்பட்ட கருத்துக்கள் இந்திய சமயங்களால் முன்வைக்கப்பட்டன. இந்நிலையில் சித்தர்களின் உலகம் பற்றியதும், உலக வாழ்க்கை பற்றியதுமான கருத்துக்கள் வேறுபட்டனவாக விளங்கின. ஒரு வகையில் அவர்கள் உலோகாயுதர்களாக விளங்கினர். உலக வாழ்க்கையை அவர்கள் மறுதலிக்கவில்லை. 'உடல் வளர்த்தார் உயிர்வளர்த்தாரே' எனப் புதுத் தத்துவம் பேசினர். அந்த வகையில் உடலைக் கட்டிக்காக்கத்தக்க வழிமுறைகளை நோக்கி அவர்களது அறிவாராய்ச்சி தொடங்கியது. இதன் விளைவாகத்தான் சித்த வைத்தியம், சித்தர் அறிவியல் சித்தர் சோதிடம், யோகாசனக்கலை, வர்மக்கலை என்பன தோற்றம் பெற்றன. உலகியலை மறுக்காது ஏற்றுக்கொண்ட அவர்களது வாழ்வியற் கோட்பாடு அறிவியல் ரீதியான அவர்களது ஆய்வுகள் முன்னோக்கி வளர வழிவகுத்தன. சித்தர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் காணப்பட்ட சமூகச் சூழலில் இவர்களது இத்தகைய சிந்தனைகள் முற்போக்கானதாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சித்தர்கள் பிற்கால உலகிற்கு அளித்த பெருங்கொடைகளாக அவர்களது வைத்தியமும் ஆராய்ச்சி முடிவுகளும் உள்ளன. சித்தர்கள் தங்கள் வாழிடங்களுக்கு அண்மையில் இரசாயன ஆராய்ச்சி கூடங்களை நிறுவியிருந்தமை பற்றிய செய்திகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இவ் இரசாயன ஆராய்ச்சியின் விளைவாகவே இரசக் கோட்பாட்டை அவர்களால் வெளிப்படுத்த முடிந்தது. மூலிகைகள் சம்பந்தமான அவர்களது ஆய்வுகள் சிறந்த வைத்தியமுறை ஒன்றுருவாக வழிவகுத்தது. சித்த மருத்துவத்தில் சத்திர சிகிச்சைக்கான மூலக் கூறுகளும் காணப்படுகின்றமை தனித்து ஆராய்தற்குரியது. சித்தர்களின் தொடர் ஆராய்ச்சித் திறனையும் அவர்களது செயற்றிறனையும் புறந்தள்ளிவிட்டு அவர்கள் இறைவன் அளித்த ஞான திருஷ்டியினால் தான் இவற்றையெல்லாம் கண்டுபிடித்தனர் என அவர்களைச் சமயப் போர்வைக்குள் போர்த்த முனைவது எவ்வகையிலும் பொருத்தமற்றதே.

சித்தர்களின் கவித்திறனும் சிந்திக்கப்பட வேண்டியதே. சிறந்த கல்விமான்களாக விளங்கிய இவர்கள் ஏனைய கவிச்சக்கரவர்த்திகளை அல்லது கவிஞர்களைப் போல பிரபந்தங்களை, காவியங்களை பாடியிருக்க முடியும். அவர்கள் வாழ்ந்த சமகாலப்பகுதியில் இத்தகைய ஆக்கங்களே நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் சித்தர்களோ இப் பொதுவிதிக்கு மாறாக மக்களின் சாதாரண பேச்சு வழக்கு நடையையே தமது படைப்புக்களில் பயன்படுத்தினர். எளிதிலே விளங்கிக் கொள்ளக்கூடிய இலக்கண விதிமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படாத நடையையே தமது படைப்புகளில் பயன்படுத்தினர். சித்தர் பாடல்கள் மக்கள் நாவில் புரளவும், அவர்கள் வெளியிட்ட கருத்துகள் முழுமையாக அல்லாவிடினும் ஓரளவு மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவதற்கும் இவ் எளிய நடையே காரணமாயிற்று. தாங்கள் கண்டுணர்ந்த தத்துவங்களைக் கூடச் சுவையாகவும் பூடகமாகவும் அவர்கள் தந்து வந்தமையை உணரும் போது அவர்களது கொள்கை நிலைப்பாட்டின் உறுதியை உணரமுடிகின்றது. 'எளிய பதம், எளிய நடை' என இருபதாம் நூற்றாண்டு இலக்கிய மொழிநடை உருப்பெற முன்னோடிகளாக - முன்மாதிரியாக - சித்தர்கள் செயற்பட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

சித்தர்களிடம் இத்தகைய முற்போக்குத் தன்மைகள் காணப்பட்ட போதும் சில இடங்களில் - குறிப்பாக பெண்கள் பற்றிய அவர்களது நிலைப்பாட்டில் அவர்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றனர். பெண்களைப் பேய்களாகவும், ஆசை காட்டி மயக்குபவர்களாகவும், பாவஞ்செய்த ஆத்மாக்களாகவும் அவர்கள் காண; காட்ட முற்பட்டனர். பெண்களைப் பற்றிய இத்தகைய கீழ்த்தரமான சிந்தனைகள் அவர்களிடம் காணப்பட்டமைக்குக் காரணம் என்ன?

(I) பெண்கள் பற்றிய அக்காலச் சமூகக் கருத்து நிலை அவ்வாறுதான் இருந்ததா?

(II) பெண்கள் அக்காலகட்டத்தில் முறைதவறி நடந்தார்களா?

(III) பெண்கள்மேற் கொண்ட தங்கள் காம உணர்வை மறுப்பதற்காக அல்லது மறைப்பதற்காக சித்தர்கள் இவ்வாறு பேசிக் கொண்டார்களா?

(IV) பெண்களை இழிநிலைப்படுத்தும் இத்தகைய பாடல்களை வேறு யாராவது எழுதி இவர்களது பாடல்களுடன் சேர்த்தார்களா?

இவற்றுள் எது அல்லது எவை சரி என்பதை நிச்சயித்துக் கொள்ளப் போதிய ஆதாரங்களில்லை. அன்றிச் சித்தர்கள் வாழ்ந்த காலப்பகுதியும் வெவ்வேறானதாக உள்ளது!. உலகியலை மறுக்காத சித்தர்கள் உலக வாழ்க்கையில் நின்றும் விலகியே வாழ்ந்திருக்கின்றனர். காடுகளிலும், மலைப்பகுதிகளிலும் அவர்களது வாழிடங்கள் இருந்துள்ளன. தீவிர ஆய்வுகளில் ஈடுபட்ட இவர்கள் மணவாழ்க்கையினால் தங்கள் ஆய்வுகளுக்கு இடையூறு உண்டாகுமோ? என எண்ணியிருக்கக்கூடும். இந்நிலையில் பெண்களை அவர்களது உடலழகை, உடலின்பத்தை இழித்துக் கூறித் தம் மனதுக்குத் தாமே நிம்மதியினை அல்லது திருப்தியைத் தேடியிருக்கலாம். இது பற்றிக் 'கசடதபற' இதழில் இந்திரா பார்த்தசாரதி எழுதிய குறிப்பும் எடுத்துக் காட்டத்தக்கது. "மரணம் என்ற யதார்த்தத்தை எதிர்நோக்கத் துணிவில்லாமல் வாழ்க்கையில் நின்றும் தப்பித்துக் கொள்ள - தென்றல், நிலா, பெண்ணின்பம் என்று பேசும் கற்பனாவாதிகளுக்கு எதிரான சிந்தனையே பெண்களை இழித்துரைப்பதனூடாக எடுத்துக் காட்டப்படுகிறது" எனகிறார்.

எவ்வாறெனினும், சித்தர்களின் முற்போக்கான சிந்தனை, அஞ்சா நெஞ்சம், மனவுறுதி, தீரம் என்பன என்றும் மதிக்கப்பட வேண்டியவையே.

✲



ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகள்

---

# தோழா சொல்



தோழா சொல்
நான் மட்டுமென்ன முற்றும் துறந்த முனிவனா ....?
இளமை பூரிக்க இதமாய் நடந்து வரும்
அழகு கண்டு ,
எனக்குள்ளும் 'இன்சுலின்' சுரக்கும்
நிமிடத்திற்கு நிமிடம் உடைமாற்றி
மரம் சுற்றிக் காதலிக்கும்
உள்ளீடற்ற சினிமா எனக்குப் பிடிக்கும்.

மறைவான இடமொன்றில் இளசுகள் கூடி
உப்பு மிளகாய்த்தூள் சகிதம் உண்ணும்
மாற்றார் தோட்ட விளாட்டு விருந்துக்கும்,
மண்கிண்டி மரவள்ளி பிடுங்கி
கொக்காரை, பன்னாடை கொண்டெரிக்க
தோட்டக்காரன் துப்பறிந்து தூசணை சொல்லித்துரத்த
ஒலிம்பிக் வீரனாய் உருமாறி
புகையிலைக் கன்றுகளே போக்கிடமான
பொற்காலத்திற்கும் மனம் சுண்டி இழுக்கும்.

கோயில் திருவிழாவிலே
கூச்சலிட்டு, விசிலடித்து, குமரிகளை சுகம் கேட்டு
தவிலுக்குத் தலையாட்டி, தார் ரோட்டில் உறங்கி
தனித்துவத்தை நிலைநாட்ட
சும்மா போறவனின் சுரணையை ஆய்வுசெய்யும்
அத்தனையும்
என் இளமைக்குள்ளும் இனம்தெரியும்
டெண்டுல்கர், விக்கெற், செஞ்சரி, வைட்
எனும் யாவும் என் ரசனைக்கும் புரியும்
'அந்த' இடம் கைபொத்த
இடியப்ப உரல் செயலாய் இருந்தெழும்பி
'கம்பஸ் சலூட்'அடிக்க ஆணையிடும்
'ராகிங்' ரணம் நுகர என்னாலும் முடியும்
என் தேர்வுப் புள்ளி விடைபகரும்.

'குட்டி' 'சரக்கு' 'மூஸ்' எனும் 'கோட்வேட்டும்
மதவடியும் எனையும் வந்து குலவும்
எனக்குள் பதுங்கும் விலங்கும்
விலங்கறுக்கும்.
குலைவாழை இலைகட்டிப் பந்தலிட்டு
ஊரார் முன் ஓமப்புகை நடுவில்
ஒருந்தி குனிந்த தலை நிமிர்வதற்குள்
தாலியிட்டு
என் காமப்பேயின் இம்சை தணித்து
மழலைச் சிறுநீரால் மார்பு நனைக்கும்
கற்பனைகள் எனக்குள் நிறைந்திருக்கும்
நான் மட்டுமென்ன முற்றுந்துறந்த முனிவனா...?

என்னோடு படித்த உயிர்த்தோழா...?
உன்போல் கனவுகளை நிறைவேற்ற முடியவில்லை
களவாழ்க்கை 'கம்பளி-கரடி' கதையென்று
நீ சொன்ன வார்த்தை
காற்றுவழிவந்து என் காது குடைகிறது.
போர்க்கருவி எமக்கென்ன பூர்வீகச் சொத்தா...?
கர்ண கவச குண்டலமா...?
போகட்டும்................

சின்ன வயதில் தீபாவளி மடலில்
'இதயக்கடல் வற்றாது' என்று நீ எழுதிய வாசகம்
இன்றும் நினைவிருக்கிறது
நாளை........ நானில்லா நாளின்
கார்த்திகை மாதக் கடைசியில்
'இரண்டு நிமிட அஞ்சலி' செய்யும் இதயமாவது
இப்போதுனக்கு இருக்கிறதா...?

**உச்சிக்கிழான்**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

- திருக்குறள்-

## நமது நோக்கு

### தொடரும் ஏமாற்றங்கள் !

சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் என்பது- பேச்சுவார்த்தை மேசையில் அமரும் இரண்டு தரப்பினரதும் விட்டுக்கொடுத்தலில்தான் தங்கி யுள்ளது.

ஆனால் இத்தகைய இணக்கப் போக்கினை படைத்தரப்பில் காணமுடியாமல் இருப்பதோடு - ஏமாற்றம் தருவதான பிடிவாதத்தினையும் அவர்கள் கொண்டிருப்பதை உணரமுடிகின்றது.

முகமாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற, யாழ்.பிராந்தியப் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் - விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட மிக முக்கியமான கோரிக்கைகளில், எவ்விதத் தளர்வுப் போக்கினையும் படையினர் காட்டாத நிலையில், முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் சந்திப்பு முடிவடைந்திருக்கிறது.

இங்கு விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் யாவுமே - அவர்களது படைத்துறை நலனோடு சம்பந்தப்படாத, மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தும் விடயங்களாகும்.

குறிப்பாக - உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதும், சுதந்திரமான கடற்தொழிலுக்கான அனுமதியும் - ஆயிரக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்வோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை களாகும்.

இதனைவிட - தடைசெய்யப்பட்ட வீதிகளைத் திறந்து வீடுவதும், புதிய காவல் நிலைகள் அமைப் பதை கட்டுப்படுத்துவதும் - மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தக்கூடியவையே.

நிலைமை இவ்வாறிருக்க - படைத்தரப்பினரோ தமது நிலைப்பாட்டிலிருந்து குறைந்தபட்சத் தளர் வினை மேற்கொள்வதற்குக் கூட சம்மதிக்காதவர் களாக இருப்பது - சமாதான நகர்வுகளை நேரடி யாகப் பாதிக்கக் கூடியதாகும்.

மக்களது இயல்பு வாழ்க்கையை மேம்படுத் தாமல், சமாதானத்திற்கான புறச்சூழலை விருத்தி செய்ய முடியாது என்பதை நன்குணர்ந்தும், படைத்தரப்பினர் தொடர்ந்தும் பிடிவாதப் போக் கிலேயே இருப்பது, ஏமாற்றந்தரும் விடயமாகும்.

அதேவேளை - முகமாலைச் சந்திப்பில் இராணு வத்தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைக ளான - முஸ்லிம் மக்களுக்கான மீளக்குடியமர்வும், யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களின் மீள்வருகையும், விடுதலைப் புலிகள் ஏற்கனவே உறுதி வழங்கிய விடயங்களென்பதும்,

இந்த விடயங்களில் புலிகளின் அரசியற்துறையி னர் ஏற்கனவே - நேரடியாக ஈடுபட்டுள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டுவிட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன், பாடசாலை மாணவர்கள், தமக் கான உரிமைகளை வலியுறுத்திப் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் நிலையில் - விடுதலைப்புலிகள் அவர் களைத் தூண்டுவதான குற்றச்சாட்டும் படைத் தரப்பில் முன் வைக்கப்பட்டது.

இதன்போது - பாடசாலை மாணவர்கள் விட யத்தில் வலுக்கட்டாயமாக நாம் எந்த விடயத்தையும அவர்கள் மேல் திணிக்கமாட்டோம் என விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தினர்.

இவ்வளவில் - படைத்தரப்பின் கோரிக்கைக ளுக்கு மிகச் சாதகமான பதில்களை, நிலைப்பாடு களை புலிகள் அறிவித்திருக்கும் போது,

மறுபுறத்தில் - படைத்தரப்பின் விடாப்பிடியான நிலைப்பாடும், தளர்வற்ற கடும்போக்கும் முகமா லையில் வெளிப்படுத்தப்பட்டன.

இத்தகைய நிலையானது - தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ள பேச்சுக்களிலும் பிரதிபலிக் கவே உள்ளது. படைத்தரப்பு - தனது பக்கமிரு ந்து சாதகமான தீர்மானங்களை எட்டாத வரைக் கும், மக்களது இயல்பு வாழ்க்கையும் கேள்விக் குறியானதாகவே இருக்கும்.

இது - அமைதி முயற்சிக்கான அடித்தளத்தை யும் ஆட்டங்காணச் செய்யும் அபாயம் நிறைந்தது என்பதைப் படைத்தரப்பினர் தெளிவாக உணர வேண்டும்.

# பேச்சுக்களில் பின்னடைவு ஏற்பட்டால் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியடையும்

## மத்திய வங்கி எச்சரிக்கை

வட- கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களில் பின்னடைவு ஏற்பட்டால் பாரிய சமூக, அரசியல், பொருளாதாரப் பாதிப்புக்கள் ஏற்படும் என்று இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

அண்மைக்காலப் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை, கைத்தொழில், தொழிற்துறைகள் ஆகிய அனைத்து முக்கிய துறைகளிலும் மீட்சியைப் பிரதிபலிக் கின்ற வகையில் பொருளாதாரம் 5-6 சதவீதம் வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்கத்தை 8 சதவீதத்துக்குள் அடுத்த வருடம் கட்டுப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காணாமற்போன படகு முல்லைத்தீவில் ஒதுங்கியது

(வடமராட்சி கிழக்கு)

இன்பருட்டி கடற்கரையில் கடந்த 6ஆம் திகதி காணாமற் போன 2இலட்சத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திரப் படகு முல்லைத்தீவிலுள்ள முள்ளிவாய்க்கால் எனும் இடத்தில் அநாதரவான நிலையிலிருந்து மீட்கப்பட்டதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தால் படகின் உரிமை யாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து படகின் உரிமையாளர் அதனை எடுத்து வருவதற்காக முல்லைத்தீவுக்குச் சென்றுள்ளார். (17)

## கைதான ஆறு புலிகளையும் பிணையில் விடுவிக்க முயற்சி

(திருமலை)

திருகோணமலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி களின் உறுப்பினர்கள் 6 பேரையும் பிணையில் விடுவிப்ப தற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவர்களைப் பிணையில் விடுவிக்கும் பொருட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று மனு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட 6 பேரையும் 29ஆம் திகதி வரை நீதிமன்றம் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால நிர்வாகத்திற்கு மக்கள் அங்கீகாரம் தேவை

# சேருவில தேரரின் மனுவுக்கு சட்டமா அதிபர் எதிர்ப்பு !

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு முன்னர் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவுக்கு ஜனவரி மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் வாதப்பிரதி வாதங்களை முன்வைக்குமாறு நீதிமன்றம் கூறியிருக்கின்றது.

சேருவில ரஜ மகா விகாரையின் பிரதம குரு சேருவில சரணகீர்த்தி தேரர் இந்த மனுவைச் சமர்ப்பித்திருக்கின்றார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த மனுவுக்கு சட்டமா அதிபர் பூர்வாங்க எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஜனாதி பதிக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. ஆனால் இதை நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்க மேன்முறையீட்டு நீதி மன்றத்துக்கு அதிகாரம் கிடையாது எனவே இந்த மனுவை நிராகரிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பூர்வாங்க ஆட்சேபத்துக்குரிய பதிலைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் வழக்குத் தாக்கல் செய்த சட்டத்தரணிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறது.

## பத்து மாதங்களுக்கு ஒரு தடவையே அலுவலகம் செல்லும் அமைச்சர்

(கொழும்பு)



பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் அமைச்சின் கீழ்வரும் சில நிபந்தனைகளுக்கு, அமைச்சரின் நேரடி விஜயம் இடம்பெறுவது குறைவடைந் திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக போக்குவரத்து நெடுஞ் சாலைகள் சிவில் விமானப் போக்கு வரத்து அமைச்சகத்துக்கு கடந்த பத்து மாதங்களில் ஒரு தடவையே இதற்குப் பொறுப்பான அமைச்சர் திலக் மாரப்பன வந்து சென்றிருக்கிறார்.

## 7 அமைச்சர்கள் நியமனத்தை ஏற்றார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு நிருபர்)

ஏழு புதிய அமைச்சர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளார். ஒருவரது நியம னத்தை மட்டும் அவர் நிராகரித்துள்ளார்.

முன்னதாக எட்டு புதிய அமைச்சர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதியிடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. இருமுறை இதற்கு ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்திருந்த போதும், பிரதமர் ரணில் மீண்டும் வலியுறுத்தியதையடுத்தே 7அமைச் சர்களை மட்டும் நியமிக்க இணக்கம் தெரிவித்தார்.

அவசர சேவைகள் அமைச்சராக பெயர் பிரேரிக்கப்பட்டி ருந்த சரத் சந்திர ராஜகருணவின் நியமனத்தை மட்டும் தன்னால் ஏற்கமுடியாதென சந்திரிகா மறுத்துள்ளார்.

## 6 மாத உலர் உணவு கூப்பன் வலி. தெற்கில் வழங்கப்படும்

### மாதமிருமுறை நிவாரணம் பெறலாம்

(மருதனார்மடம்)

வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர் களுக்கு ஆறுமாத காலத்துக்கான உலர் உணவுக் கூப்பன்கள் வழங்கப்படவுள்ளன.

நவம்பர்-2002 தொடக்கம் ஏப்பிரல் 2003 வரையான காலப் பகுதிக்குரியனவாக வழங்கப்படும் உலர் உணவு முத்திரைகள் மூலம்-இரு வாரங்களுக்கு ஒரு முறையாக நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

மாதாந்தம் ஒரு தடவையாக விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருட்களில் கணிசமான பகுதியை வெளிச் சந்தையில் விற்கப்படுவதால் இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.(89)

## 61 பற்சிகிச்சை நிபுணர்கள் வடபகுதி ஆஸ்பத்திரிகளுக்கு தேவை

(கொழும்பு)

வட பகுதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் 61 பற்சிகிச்சை நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலேயே இந்தப் பற்றாக்குறை நிலவுவதாக அவர் கூறினார்.

கடந்த காலங்களில் கூடுதலான வைத்தியர்கள் இந்தப் பகுதிக்குச் செல்ல மறுத்ததாலேயே இப்பற்றாக்குறை ஏற்பட்டது என்றும்,

சமாதான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன் எடுக்கப்படும் நிலையில் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

தற்போது நாடு முழுவதும் 465 பற்சிகிச்சை நிபுணர்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான முயற்சிகளுக்கு ரொனி டி மெல் ஆதரவு

## வரவு செலவுத்திட்ட உரையில் தெரிவிப்பு

ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத்தை ஏற்படுத்தும் எந்தவிதத் தீர்வுக்கும் ஆதரவு வழங்க நான் தயாராக இருக்கின்றேன். எந்த வேளையிலும் அழையுங்கள். ஆதரவு கொடுப்பேன். ஏனைய கட்சிகளும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று பொ.ஐ. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்திலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இப்பொழுது சமாதானத்தை ஏற்படுத்த நல்ல சந்தர்ப்பம் வந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள் ளேன். யாருக்கும் பயப்படமாட்டேன். இந்த நாடு நீடித்து நிலைக்க வேண்டுமென்றால் சமாதானம் நிலவவேண்டும். இவ்விடயத்தில் யாரும் குறுகிய அரசியல் இலாபம் கருதி செயற்படக்கூடாது. நிரந்தரமாக சமாதானம் ஏற்பட்டால் தான் இந்த நாடு பொருளாதார ரீதியாக முன்னே ற்றமடையும். மக்களும் மகிழ்ச்சியாக வாழ்வார்கள் என்றார்.

# போதிய ஆளணி வசதிகள் இல்லாத நிலையிலும் நோயாளருக்கு சிறந்த சேவை வழங்க முனைகிறோம்

*யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் மருத்துவத்துறை மட்டுமல்லாது ஆன்மீகத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவரிடம் மிக மென்மையான இனிய சொற்களை ஒளிவு மறைவற்ற வெளிப்படையான பேச்சைக் கேட்க முடிகிறது, யாழ். வைத்தியசாலைக்கு இவர் போன்ற நேசநெஞ்சினரின் சேவை கிடைத்துள்ளது பெரும் வரப்பிரசாதம்.*

*கேள்வி:-* அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ரொகி பெரேரா, இவ்வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையைத் தீர்க்க உள்ளூர் பத்திரிகைகள் மூலம் உடனடியாக விளம்பரம் செய்து விண்ணப்பம் கோருமாறு பணித்திருந்தார். இது எந்தளவுக்குப் பலனளித்துள்ளது என்பது பற்றிக் கூறுவீர்களா?

*பதில:-* இக்கோரிக்கை பெரிதாகப் பலனளித்துள்ளது என்று கூறுவதற்கில்லை. ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய 5 பேர் வரையிலான தாதிகளே விண்ணப்பித்தனர். இளைப்பாறிய மருத்துவர்கள் ஒருவருட கால ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பிக்கவே விளம்பரம் செய்யப்பட்டது. ஆயினும் எதிர்பார்த்தளவு எமது எண்ணம் நிறைவேறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இளைப்பாறிய மருத்துவர்கள் அதிகளவில் வெளிநாடு சென்று விட்டதும் இதற்குக் காரணமாயிருக்கலாம் எனக்கருதுகின்றேன்.

*கேள்வி:-* ஒரு குறிப்பிட்ட வயதெல்லை வரைதான் ஒரு மருத்துவர் உடல், உள ரீதியாக நோயாளர்களுக்குத் திருப்தியான பணியைச் செய்ய முடியும். அவர்கள் அந்த வயதெல்லையைக் கடந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கையில் அவர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கழைத்து பெருமளவு வேதனத்தை வழங்குவதால் ஆக்கபூர்வ பலன் எதுவும் கிடைக்கும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:*இது பற்றி நான் கருத்து எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை. வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதனால்தான் இத்தகைய நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்று மாத்திரமே என்னால் சொல்ல முடியும்.




*கேள்வி:* இங்கு தாதிமாருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது என்றும் கடமையிலுள்ள தாதிமார் வேலைப்பளுவால் தவிக்கிறார்கள் என்றும் இவ் வைத்தியசாலை வட்டாரங்களில் அங்கலாய்ப்புத் தெரிவிக்கப்படுகிறது எனக் கூறப்படுவது பற்றி....

*பதில்:* இக்கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. தாதிமாருக்கு இங்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. 150 தாதிமார் வரை தற்போது எமக்குத் தேவையாக உள்ளனர். அதுவும் உடனடியாக. ஆயினும், தற்போது பணியிலுள்ள தாதிமார் முகம் சுழிக்காது மனப்பூர்வமான கடமையுணர்வுடன் பணி புரிகின்றனர் என்பதனை என்னால் உறுதியாகச் சொல்லமுடியும்.

*கேள்வி:*இங்கு பணியிலுள்ள சிற்றூழியர்கள் பலரும் நீண்டகாலமாக பதவி நிரந்தரமாக்கப்படாதுள்ளனர் எனக் கூறப்படுவது பற்றி...

*பதில்:* மேலிடம் தகுந்த நேரத்தில் தக்க நடவடிக்கையை இது விடயத்தில் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளது.

*கேள்வி:* மேலும் எந்த பதவிகளுக்கு கூடுதல் வெற்றிடமுள்ளதாகக் கூற விளைகிறீர்கள்?



**எஸ். சதுர்முகன்**

*பதில்:* ஆய்வுகூடப் பரிசோதகர்கள் பற்றாக்குறை வெகுவாக உள்ளது. எக்ஸ்ரே டெக்னிஷியன்கள் தட்டுப்பாடும் குறிப்பிடத்தக்களவு உள்ளது. பத்துப் பேராவது இப் பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டாக வேண்டும்.

*கேள்வி:* இவ் வைத்தியசாலை கட்டடங்களின் நிலைமை குறித்து....

*பதில:* கட்டடங்கள் பலவும் மிகவும் பழமை வாய்ந்தவை. பலமுள்ளதாக இல்லை. இக் கட்டடங்கள் திருத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்காக புதிய திட்டம் ஒன்று சுகாதார அமைச்சினால் வகுக்கப்பட்டுள்ளது.

*கேள்வி:* வைத்தியசாலை அபிவிருத்திக்கு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கின்றனவா? எந்த வகையில்?

*பதில்:-* ஆம். வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகள் குறிப்பிடத்தக்களவு கிடைக்கின்றன. மருத்துவச் செயற்பாடு சீராக அமைய இவை பெரிதும் உதவுகின்றன. வெளிநாட்டு மருத்துவ நிபுணாகளின் பணியும் இங்கு சேவை சிறப்புற உதவுகின்றது.

*கேள்வி:* இறுதியாக தங்கள் நிர்வாகச் செயற்பாடு பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

*பதில்:* தற்போது நிலவும் சுமுக சூழ்நிலையில் எம்மிடமுள்ள வசதிகளுக்கேற்ப நோயாளர்களுக்கு இயன்றளவு சிறப்பான பணியினை ஆற்றி வருகின்றோம். பணிப்பாளர் என்ற வகையில் நான் புரியும் பணிக்கு, செயற்பாட்டுக்கு இங்கு பல்வேறு பிரிவுகளிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் மனப்பூர்வமான ஒத்துழைப்பினை நல்கி வருகின்றனர். இதனால் எனது பணியை இறைவனுக்கு விசுவாசமாகச் செய்து வருவது சாத்தியமாகின்றது.

**நேர்காணல்: ஸ்ரீநடா**

# சொந்த இடம் திரும்பும் ஏக்கத்தோடு காத்திருக்கும் நாகர்கோவில் மக்கள்!

அரசாங்கத்தின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் படைத்தரப்பிடம் இன்னமும் இழுபறிநிலை இருந்தே வருகின்றது. இந்நிலையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட சரத்துக்களைப் படையினர் நிறைவேற்றுவர் என்று இடம் பெயர்ந்த மக்கள் உறுதியாக நம்பி வருகின்றனர்.

நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, முகாம்களில் வாழும் அவலம் நீங்கி- தங்களது சொந்த இருப்பிடங்களுக்கு சென்று, இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பலாம் என நம்பியிருந்தனர் நாகர்கோவில் பிரதேச மக்கள்.

இரண்டாயிரமாம் ஆண்டு பங்குனி மாதம் வடமராட்சி கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர், தமது நிலைகளை விட்டு வெளியேறி, நாகர் கோவில் பிரதேசத்தில் பாரிய இராணுவத்தளம் அமைத்து நிலை கொண்டனர். நாகர் கோவீல் மேற்கு, நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில் கிழக்கு ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளையும், அம்பன் பிரதேசத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கி இராணுவ முகாம்கள் அமைக்கப் பட்டன.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் யுத்தம் நடைபெற்றமையால் தமது உடமைகளை விட்டு, உடுத்த உடைகளுடன் உயிரே போதும் என்று இடம்பெயர்ந்து ஆலயங்கள், வீதிகளில் தங்கியிருந்தனர்.

இடம்பெயர்ந்த சுமார் 1300 குடும்பங்கள வடமராட்சி பிரதேசத்தில் தும்பளை லூர்துமாதா கோவில், இலட்சுமணன் தோட்டமுகாம், தேவரையாளி முகாம்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது வீடுகளில் விட்டு வந்த விவசாய உற்பத்திப் பொருட்கள், கடற்றொழில் உபகரணங்கள், உடமைகளை மீட்டுவருவதற்கு உதவுமாறு பலமுறை கோரியும், அமைச்சர்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ நடவடிக்கை எடுககவில்லை. இரண்டு வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் அவலவாழ்வைக் கழித்து வரும் இப்பிரதேச மக்கள் தொழிலின்றி நிவாரணத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களில் சுமார் ஆயிரத்து 250 குடும்பங்கள் கடற்தொழிலையே நம்பி வாழ்ந்து வரு

**செய்திக் கட்டுரை**



பவர்கள். தமது உடமைகளை எடுத்து வர முடியாமையால் கடற் தொழிலை மேற் கொள்ள முடியாது நாளாந்த வாழ்வை நகர்த்து வத ற்கே முடியா மல் இருக்கின்றனர்.

இடம்பெயர் வுக்கு முன் கடனடிப்படையில் கடற்தொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்தவர்கள் கடனை மீளச் செலுத்த முடியாதுள்ளனர். இப்பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 150 குடும்பங்கள் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலுள்ள விவசாய நிலங்களைக் கைவிட்டு வந்ததால், விவசாயத்தையே நம்பி இருந்தவர்கள் தொழிலை இழந்து வாழ்ந்து வருகின்றனர். நாளாந்தம் கடற்தொழிலையே நம்பி வாழ்ந்தவர்கள் நிலை மிக வும் பரிதாபகரமாக உள்ளது. இடம்பெயர்வின் பின் முகாம்களில் தங்கியிருக் கும் மக்கள் இன்னமும் அடிப்படை வசதிகளின்றியே நமது ஜீவனோபாயத்தைக் கழித்து வருகின்றனர்.

நாகர் கோவில் மகாவித்தியாலயம், நாகர் கோவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை என்பன தொடர்ந்தும் இராணுவமுகாமுக்குள் முடங்கியுள்ளதால் பாடசாலைகள் இரண்டும் பருத்தித்துறை நகரிலே இயங்கி வருகின்றன. முகாம்களிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் நீண்ட தூரம் சென்றே தமது கல்வியை தொடரவேண்டியுள்ளது.

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி மூடப்பட்டுள்ளதால் வல்லிபுரம் முதல் சுண்டிக்குளம் வரை18 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட வடமராட்சிகிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி முற்றாக பாதிப்படைந்துள்ளது. நாகர் கோவில இராணுவ முகாமுக்கு மேற்கே 5 கிராம அலுவலர் பிரிவுகளும் கிழக்கே 10 கிராம அலுவலர் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் இன்னமும் இராணுவ முகாமுக்குள் முடங்கியுள்ளன. இம்முகாம் ஊடாகச் செல்லும் மருதங்கேணி வீதி மூடப்பட்டுள்ளதால், யுத்தத்தினால் சேதமடைந்திருக்கும் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் அபிவிருத்தி முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது. ஏற்கனவே அபிவிருத்தியில் பின் தங்கிய நிலையில் தான் வடமராட்சி கிழக்குப் பிரதேசம் இருந்து வந்துள்ளது.

அரசாங்கமும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து, நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள செம்பியன் பற்று முதல் சுண்டிக்குளம் வரையான பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். இவர்களுக்கான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த அரச, தனியார் திணைக்களங்கள், பொது அமைப்புக்கள் முயற்சித்துவருகின்ற போதிலும் வீதித்தடை முக்கிய பிரச்சினையாக அமைந்துள்ளது.

வடமராட்சி கிழக்கை இரண்டாக பிரிக்கும் இந்த வீதித் தடையினால், சுமார் 32 மைல் துரத்தைச் சுற்றியே அரசாங்க, தனியார், கூட்டுறவு திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் சென்று வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு மக்களுக்கு சுகாதார சேவையை வழங்கி வந்த அம்பன் வைத்தியசாலை இராணுவ முகாமுக்குள்- சேதமடைந்த நிலையில் இயங்க முடியாதுள்ளது. இதனால் மீளக் குடியமர்ந்து வரும் மக்கள் மருத்துவ வசதிகளைப் பெற சுமார் 40 மைல் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. அம்பன் பகுதியிலுள்ள மக்கள் 10 மைல் தூரம் பயணம் செய்து மந்திகை மருத்துவமனைக்கு செல்ல வேண்டியுள்ளது. போக்குவரத்ததிற்கு உரிய நேரத்தில் வாகனங்களைப் பெறமுடியாமையால் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படும் நோயாளர்கள் இடைவழியில் இறக்கும் சம்பவங்களும் நடைபெறத்தான் செய்கின்றன .அம்பன் மகப்பேற்று விடுதி இயங்காமையால் கர்பிணிகள் வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியிலேயே குழந்தைகளைப் பிரசவிக்கின்றனர். இதனால் உயிர் ஆபத்துக்களும் ஏற்படும் அபாயங்களும் உண்டு. இலங்கையிலேயே மலேரியா தாக்கம் அதிகம் உள்ள பிரதேசங்களில் வடமராட்சி கிழக்கும் ஒன்றாகும். கடந்த வருடம் மலேரியா தொற்றினால் மருத்துவ வசதிகளின்றி இரண்டு சிறுவர்கள் இறந்தமை குறிப்பிடத்தக்கதாகும். வடமராட்சி கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள செம்பியன்பற்று முதல் சுண்டிக்குளம் வரையான மக்களுக்கு வாரத்தில் இரண்டு தினங்கள் நடாத்திவரும் மருத்துவ முகாம் இப்பகுதி மக்களுக்கு போதியதாக அமையவில்லை. இந்தப் பகுதிகளுக்கு மருத்துவ முகாம் நடாத்தச் செல்லும் வைத்திய குழுவினர் முகமாலைச் சோதனைசாவடி ஊடாக நீண்ட தூரம் பிரயாணம் செய்து, சேவைகளை வழங்க வேண்டியுள்ளது. இதனால் வாரத்தில் நான்கு நாட்கள் மட்டுமே இம் மருத்தவ முகாமை நடத்தக் கூடியதாக உள்ளது என சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் தொடர்ந்து இடையூறுகள் எதிர் நோக்கப்பட்டு வருவது, இப்பகுதி மக்களிடம் விரக்தியையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

தமது சொந்த இருப்பிடங்களை விட்டு, வெளியேறிய இப்பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களில் மீள குடியமரலாம் என ஏங்கும் இவ் வேளையில், இவர்களின் நலனில் இன்னமும் எவரும் அக்கறை எடுக்காதிருப்பது அம் மக்களுக்கு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. மக்களுடைய வாழ்விடங்களில் முகாமிட்டு வீதித் தடைகளை நீக்காது இன்னமும் யுத்தம் நடைபெறும் பிரதேசமாகக் கருதும் படை அதிகாரிகளும் ஒரு கணம் சிந்திப்பார்களானால் இவர்கள் வாழ்வில் ஒளிவீசும் என்பது திண்ணம்.

**வடமராட்சி நிருபர்**
**சபா.கிருஷ்ணன்**

# அல்- கெய்டாவின் அரேபியத் தளபதி கைதானதாக குவைத் அரசு அறிவிப்பு !

(குவைத்)

குவைத் நாட்டின் பாதுகாப்புத் துறையினர்- தாம், அல் கெய்டா அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மோஹ்சன்ஃஎவ் (Mohsen-F) என்ற 27 வயது நிரம்பிய குவைத் நாட்டவரான இவர், அராபியக் குடாவில் அல் கெய்டாவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக ஒசாமா பின்லேடனால் நியமிகக்கப்பட்டிருந்ததாக குவைத் தெரிவித்துள்ளது.

யேமன் நாட்டுத் தலைநகரான சனாவில் (sanaa) அமெரிக்கர்களால் பயன்படுத்தப்படும் விடுதி ஒன்றின் மீது தாக்குதலை நடத்த, குவைத் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவருக்கு ஒரு லட்சத்து இருபதினாயிரம் அமெரிக்க டொலர்கள் கொடுத்து, மேற்படி நபர் சதித்திட்டம் தீட்டியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அல் கெய்டா அமைப்பினர் அமெரிக்கா மீதும் மற்றும் மேற்கைரோப்பிய நாடுகள் மீதும் தாக்குதல்கள் நடத்தலாம் என்ற சந்தேகங்கள் வலுவாக உள்ள நிலையில் 'அல் கெய்டா'வுக்கு ஆதரவான அரபு தொலைக்காட்சி நிறுவனம் என அழைக்கப்படும், அல்-ஜசீரா தொலைக்காட்சி நிறுவனத்திலிருந்து, முஸ்லீம் அல்லாதவர்களுக்கு என அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் -'அமெரிக்கா, வரிகள் மூலமாக வாங்கும் பணத்தினைக் கொண்டு நீதியற்ற முறையில் முஸ்லிம் மக்கள் மீது போர் தொடுத்துள்ளதாகவும் மனித குல வரலாற்றிலேயே அமெரிக்கா மிகவும் கொடிய நாடு' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேலியர்களின் யுத்தம், செச்னியர்களுக்கு எதிரான ரஷ்யாவின் யுத்தம், மற்றும் ஊழல் நிறைந்த முஸ்லிம் நாட்டுத்தலைவர்களுக்கு ஆதரவாக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் சர்வதேசத்தை அவ்வறிக்கை கோரியுள்ளது.


ஒசாமா பின்லேடன்

## ஆப்கானியரை திசைமாற்றும் மேற்கு நாட்டவர்கள்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி விலகியதன்பின்னர், மேற்குலக கலாசார மாதிரிகளை ஆப்கானிய மக்கள் அந்நியமாக நோக்கியதில் இருந்து மாறுதலடைந்து, அவற்றைத் தாங்களும கைக்கொள்ளும் நிலைக்கு மாறி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களில் வேலை செய்யும் 1000க்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் உபயோகிக்கும் பொருட்கள், பயன்படுத்தும் வாகனங்கள், மற்றும் குடிவகைகள் காபூலில் தாராளமாக கிடைப்பதனையிட்டு ஆப்கானியர் வியப்படைந்துள்ளனர்

அந்தளவிற்கு காபூலில் உள்ள மக்கள் பிரமிக்கும் வகையில் மேற்குலகப் பொருட்கள் குவிக்கப்பட்டு,

மக்களின் மனோநிலையில் மாற்றங்கள், மிகவும் திட்டமிடப்பட்டே மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிலைமையை ஆராய்ந்த சமூகவியலாளர்கள் கூறுகின்றனர்.

## ஹிப்ரோன் தாக்குதலின் எதிரொலி பலஸ்தீனப் பகுதிகள் சுற்றிவளைப்பு

### தாக்குதலை தீவிரமாக்க இஸ்ரேல் முஸ்தீபு

இஸ்ரேலின் மேற்குக் கரை நகரமான ஹிப்ரோனில் கடந்த வெள்ளிக்கிழமை இஸ்லாமிய ஜிகாத் அமைப்பினரின் இரட்டை


கொல்லப்பட்ட பலஸ்தீனியர்களின் சடலங்கள்

அதிரடித்தாக்குதல்களைத் தொடர்ந்து ஹிப்ரோனில் இஸ்ரேலிய இராணுவத்தினர் பாலஸ்தீனர்களின் வீடுகளில் தீவிரமான சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நகரின் மையப்பகுதி மற்றும் இராணுவ வியூகத்துக்குள்ளாகக் கூடியது எனச் சந்தேகிக்கப்படும் கட்டடங்களை இஸ்ரேலிய இராணுவத்தினர்


தாக்குதலுக்கு உள்ளான இஸ்ரேலியர்கள்

சுற்றி வளைத்துத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இஸ்ரேலிய வானொலித் தகவல்களின்படி பிரதமர் ஏரியல் ஷரோன், இஸ்ரேலிய இராணுவத்தினரை பாலஸ்தீனப் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக முடுக்கி விட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

நேற்றுக் கூடிய இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்டக்


தாக்குதலில் இஸ்ரேலியப்படை

குழுக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் ஷாகுல் மோவாஸ, இராணுவ உயர் மட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்து எதிர்காலத்தில், மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

இதே வேளை, ஹிப்ரோனில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்கியுள்ள இஸ்ரேலிய இரர்ணுவத்தினர் - கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்று ஜிகாத் உறுப்பினர்களின் உறவினர்களையும் கைது செய்துள்ளனர்.

ஹிப்ரோனில் இரட்டை அதிரடித் தாக்குதலில் மூன்று யூதக் குடியேற்ற வாசிகளும், இஸ்ரேலிய இராணுவ உயர் அதிகாரியான கேணல் டோர் வெயின்பேர்க் (Dror weinberg) உட்பட ஒன்பது இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

அண்மைக்காலங்களில் கேணல் தரத்திலான உயர் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டது இதுவே முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாலித்தீவுக் குண்டு வெடிப்பு விவகாரம்

# மேலும் ஐந்து சந்தேக நபர்களின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டன!

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் பாலத்தீவில் கடந்த மாதம் உல்லாசப் பயணிகள் விடுதிகள் மீது நடத்தப்பட்ட இரண்டு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான சந்தேக நபர்களின் புகைப்படங்களை இந்தோனேஷியப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.


தேடப்படும் 6 சந்தேக நபர்கள்

குண்டுத்தாக்குதலை நடத்தியதற்கு ஒரு குழுவினரே காரணமாக இருந்தார்கள் எனவும் அக்குழுவில் ஒரு தலைவரும் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டுத்தாக்குதலுக்கு பொறுப்பான தலைவர் எனச் சந்தேகிக்கப்படும் நபரின் புகைப்படம் உட்பட 6 சந்தேக நபர்களின் புகைப்படங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

கடந்த மாதம் நடைபெற்ற மேற்படி குண்டுத்தாக்குதல்களில் 180 வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட 200 பேர் கொல்லப்பட்டதுடன், இந்தோனேஷிய அரசாங்கத்தின் மீதும் அதனது உள்நாட்டுப் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாகவும் சர்வதேச ரீதியில் பலத்த நெருக்கடிகளும் விமர்சனங்களும் உண்டாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்குண்டுத்தாக்குதலுக்கு அடிப்படைவாத அமைப்பான 'ஜம்மா இஸ்லாமியா' தான் காரணம் என முன்பு குற்றம் சாட்டப்பட்டதோடு, அவ்வமைப்பைச் சேர்ந்த அம்றோஷி என்ற இந்தோனேஷிய நாட்டுச் சந்தேக நபர் மட்டுமே கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆனால், தற்பொழுது இந்தோ


பாலித்தீவுக் குண்டுவெடிப்பு

னேஷியக் குற்றப்புலனாய்வுத் துறையினர், இக்குண்டுத்தாக்குதலில் 'ஜம்மா இஸ்லாமியா' அமைப்பினரோ அல்லது 'அல் கெய்டா' அமைப்பினரோ நேரடியாக ஈடுபடவில்லை என்பதுடன்,

மாறாக இவ் அமைப்புக்களுடன் வலைப் பின்னல் தொடர்புடையவர்களே இத்தாக்குதல்களை நடத்தியிருக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்பொழுது இனங்காணப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இன்னமும் இந்தோனேஷியாவிலேயே வசித்து வருவதாகவும், அவர்கள் இன்னமும் நாட்டை விட்டு வெளியேறவில்லையெனவும், எனவே- அவர்கள் கைது செய்யப்படுவதற்கு அதிக காலம் செல்லாது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் பாலித்தீவுக் குண்டு வெடிப்புக்களுக்குரிய, குண்டுகளைத் தயாரித்தவர் ஜாவாத் தீவினைச் சேர்ந்த சமுத்திரா என்பவர் எனவும், அவர் 'அல் கெய்டா' செல்வாக்குடனிருந்த காலத்தில் ஆப்கானிஸ்தானுக்கு அடிக்கடி விஜயம் மேற்கொண்டு குண்டு தயாரிக்கும் தொழில்நுட்பத்தை கற்றுக் கொண்டவர் எனவும் இந்தோனேஷியப் பொலிஸார் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## வெனிசுவேலா ஜனாதிபதியின் பதவி நீடிப்பு விவகாரம்

# புரட்சி செய்த பொலிஸாருக்கு எதிராக ராணுவம் களத்தில்!


ஜனாதிபதி சாவேஸ்

வெனிசுவெலா நாட்டின் ஜனாதிபதி ஹுயுகோ சாவேஸ், தனக்கு எதிராகப் புரட்சி செய்த பொலிஸாரைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரின் உதவியை நாடியுள்ளார். அத்துடன் தலைநகர் ஹராக்கஸினை, நகர மேயரின் கட்டுப்பாட்டிலிருந்து தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டு வந்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ் தலைமையகத்தில் ஜனாதிபதி சாவேஸின் ஆதரவாளர்களுக்கும் சர்வஸிற்கு எதிரானவர்களுக்கும் இடையே மோதல்களும் இடம்பெற்றுள்ளன.

அரசாங்கத்திற்கு எதிரான எதிர்கட்சிகளின் கூட்டமைப்பு, ஜனாதிபதியின் மேற்படி நடவடிக்கை அரசியல் திட்டத்திற்கு முரணானது எனத் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை - ஜனாதிபதி சாவேஸிற்கு ஆதரவான படையினர், தலைநகர் ஹராக்கஸில் உள்ள பொலிஸ் நிலையங்களை முற்றுகையிட்டு, அவற்றினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர் எனத் தெரிகிறது. ஹராக்கஸ் நகர பிதாவின் கட்டுப்பாட்டிலிருந்த நகரப் பொலிஸ் உடனடியாக கட ந்த சனிக்கிழமை முதல அரச கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.


தலைநகரில் இராணுவம்

1978 இல் தேர்தல் மூலம் தெளிவான ஜனாதிபதி சாவேஸ் மீண்டும் தேர்தலை வைக்காது 'மக்கள் தீர்ப்பின்' மூலம் தனது ஆட்சிக் காலத்தை நீடித்ததே இந்த குழப்பத்திற்கு காரணம் எனக்கூறப்படுகின்றது.

ஜனாதிபதி சாவேஸின் இச் செயற்பாட்டினால் ஆத்திரமடைந்த எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சிகளுக்கான ஆதரவுப்படையினரும் எதிர் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD
CES
உங்களின் பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்கு கணினித்துறையில் அத்திவாரமாக அமைய வேண்டின் எங்களுடன் தொடர்பு கொள்க
மேலும் சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், கொம்பியூட்டர் Games, மற்றும் விசேட வகுப்புக்கள்.
விண்ணப்ப முடிவு திகதி: 15.12.2002
Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road, Jaffna.
(Opposite of J/Hindu Primary)
(சி-158)

# ஒஸ்லோ மாநாட்டைத் தொடர்ந்து பொதுத் தேர்தலை ரணில் அறிவிப்பார்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் ஒஸ்லோ மாநாட்டைத் தொடர்ந்து வெளியாகுமென்றும் கட்சியின் சகல மட்டங்களும் தேர்தலுக்காகத் தயார் நிலையில் இருக்கவேண்டுமென்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இந்த அறிவித்தல் பகிரங்கமான முறையிலல்லாது தனிப்பட்ட தொடர்புகள் வழியாகக் கிடைத்திருப்பதாக ஐக்கியதேசியக் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் நமது செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் கொலை தொடர்பாக ஜே.வி.பிக்கு எதிராகத் தெற்கில் பலத்த எதிர்ப்பு எழுந்துள்ள நிலையிலும்,

சமாதானத்திற்கு எதிரான நிலைப்பாட்டினை பொதுஜன ஐக்கிய முன்னணி ஆரம்பித்துள்ள நிலையிலும்,

பொதுத் தேர்தலொன்று நடாத்தப்பட்டால் அது ஐ.தே.கவுக்கு சாதகமானதாக இருக்குமென்ற கணிப்பிலேயே ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவித்தலை விடுத்ததாக அந்த முக்கிய ஐ.தே.க தலைவர் மேலும் கூறினார்.

# சிங்கள - முஸ்லிம் மக்களிடையே கலவரம் வெடிக்கும் அபாயம்!

## புத்தளத்தில் கடைகள் எரிப்பு

(புத்தளம்)

புத்தளம் மதுரங்குளியில் சிங்கள முஸ்லிம் இனங்களுக்கிடையிலான கலவரம் ஏற்பட்டதில் பத்துக் கடைகள் மற்றும் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதுடன் மூவர் காயமடைந்தும் உள்ளனர்.

நேற்று மாலை மதுரங்குளிப் பகுதியில் முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் மத்தியில் தோன்றிய கைகலப்பு மோதலாக மாறியது.

இதனையடுத்து பள்ளிவாசலுக்குச் சென்ற முஸ்லிம்கள், சிங்களவர்களால் தாக்கப்பட்டனர்.

அத்துடன் புத்தளம் பகுதியிலுள்ள பத்துக் கடைகள் சேதமாக்கப்பட்டன. ஒரு கடைக்குத் தீ வைக்கப்பட்டு எரிந்து நாசமாகியது. மூன்று முச்சக்கரவண்டிகளும் சேதமடைந்தன.

மோதல்களின்போது மூவர் காயமடைந்துள்ளனர். தொடர்ந்தும் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகின்றது.

இரு தரப்பினரும் மோதலுக்குத் தயார்நிலையில் இருப்பதால், பெரும் இனக்கலவரம் ஏற்படலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

இதேவேளை - வடமேல் மாகாண சுகாதார அமைச்சர் நவவி, இந்த மோதல்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தெரியப்படுத்தியதையடுத்து-

நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக அப்பகுதிக்கு இராணுவம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக புத்தளம், வண்ணாத்திவில்லு, முந்தல் போன்ற பொலிஸ் நிலையங்களில் இருந்து மேலதிக பொலிஸார் மதுரங்குளிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் புத்தளம் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தொடர்ந்து புத்தளம் ஊடாக வாகனப் போக்குவரத்துக்களை உடனடியாகப் போக்குவரத்துப் பொலிஸார் இடைநிறுத்தியுள்ளனர்.

பாலாவி ஊடாகவே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

# மக்களிடமுள்ள அச்சத்தைப் போக்கி நெடுந்தீவில் அமைதியை ஏற்படுத்துங்கள்

## கண்காணிப்புக் குழுவிடம் யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் கத்திகள், வாள், பொல்லுகள், மற்றும் கண்ணீர்புகைக் குண்டுகளுடன் தரையிறங்கியுள்ளனர். கடற்படையின் உதவியுடன் சென்றுள்ள இவர்கள் மக்களைப் பழிவாங்கலாம் என்ற அச்சம் அங்கு நிலவி வருவதால் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு சுமுக நிலையை மீண்டும் கொண்டுவருவதுடன் நெடுந்தீவில் அமைதியை நிலைநாட்டுமாறும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு - யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அவசரக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இக்கடிதத்தில்- நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் தரையிறங்கியிருப்பதால் ஏற்பட்டுள்ள அச்சத்தால் அங்கு மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கடைகள் மூடப்பட்டிருப்பதாகவும் போக்குவரத்து, சந்தைகள் மற்றும் பொதுச்சேவைகள் சீர்குலைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியினரில் மேலும் 150 பேர் கடற்படையின் தரையிறங்கு கலங்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டிருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜப்பானிய...

நிலையில் கலந்துகொள்ளவுள்ளது.

இதற்காக இவ்விசேட பிரதிநிதிகள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்குடன் இன்று கிளிநொச்சிக்குச் செல்வர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### புனர்வாழ்வு...

பாளர் பூவண்ணன், புலிகளின் சமாதான செயலணியின் செயலாளர் புலித்தேவன் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர் எனத் தெியவருகின்றது.

### விடுதலைப்...

தின் பின்னர் புலிகள் மீதான தடைகளைத் தளர்த்தும் அல்லது நீக்கும் முடிவுகளை இந்நாடுகள் எடுக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இது தற்போதைய சமாதான முயற்சிக்கு ஊக்கம் தருவதாக இருக்குமென அந்நாடுகள் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஒஸ்ரின்...

இந்த நிலையில் நேற்று கடற்படையினரின் படகுகள் ஆயுதபாணிகளை நெடுந்தீவில் தரையிறக்கியதாக தெரியவருகின்றது.

### நுணாவில்...

கூடுகள் இருப்பது சாவகச்சேரிப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து இவ்விடயம் சாவகச்சேரி நீதவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

கடந்த 16ம் திகதி நீதவான் குறித்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். யுத்த சூழலில் ஷெல் வீச்சுக்குப் பலியானதாகக் கருதப்படும் இரு ஆண்களின் எலும்புக் கூடுகளாக அவை இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

### அம்பாறையில்...

கூடியிருந்த மைதானத்தில் பயிற்சியை முடித்த போராளிகளின் இராணுவ அணிவகுப்பு மரியாதையை மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தனன், அம்பாறை மாவட்டத் தாக்குதல் படையணித் தளபதி திலக், மட்டு - அம்பாறை புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கீர்த்தி, மாவடி முன்மாரி கோட்டத் தளபதி நாகேஸ் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து பயிற்சியை முடித்துக்கொண்ட போராளிகளின் சாகச நிகழ்வுகளும் இடம்பெற்றன. (08)

### போராட்டத்துக்கு...

மட்டுமன்றி துப்பாக்கிகளுடன் நடமாடுவதையும் காணமுடிவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் ஈ.பி.டி.பியினர் தம்மை அச்சுறுத்தியதாகவும் நெடுந்தீவு மக்கள்- விடுதலைப் புலிகளுக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது புரிந்துணர்வு உடன்பாட்டை பாதிக்கும் திட்டமிட்ட செயல் என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ஈ.பி.டி.பியினரை....

மணிக்கு முன்பதாக நெடுந்தீவை விட்டு வெளியேறிவிட வேண்டும் எனப் பொதுமக்களால் காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்குமிடையில் நடந்த பேச்சுகளின்போது, தாம் நெடுந்தீவை விட்டுப் போவதற்குத் தயாராக இருப்பதாகவும், வெளியேறிச் செல்வதற்காகத் தற்போது சேவையில் உள்ள ப.நோ. கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான படகைத் தம்மிடம் தருமாறும் ஈ.பி.டி.பியினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மக்கள் அப்படகை கொண்டு செல்ல முடியாது என மறுத்துவிட்டனர்.

பொதுமக்களின் முற்று கைப் போராட்டம் நீடித்த நிலையில் தாம் கொண்டு வந்த பொருட்களுடன் ஈ.பி.டி.பியினர் இறங்குதுறைக்குச் சென்றனர்.

துறைமுகத்தில் தங்கியுள்ள ஈ.பி.டி.பியினரைத் தொடர்ந்தும் கொட்டும் மழையிலும் பொதுமக்கள் முற்றுகையிட்டுள்ளனர். அத்துடன் நேற்றும் கடற்படையினரின் இரண்டு படகுகளில் சுமார் 20 ஈ.பி.டி.பியினரும், கடற்படையினரும் நெடுந்தீவில் தரையிறங்கியுள்ளனர்.

துறைமுகத்தில் தங்கியுள்ள இவர்களுக்கான உணவு வசதிகளை பொலிஸார் வழங்கி வருகின்றனர்.

இதற்கிடையில் ஈ,பி.டி.பியினர் வந்த படகு பழுதடைந்ததால் நேற்றுக்காலை படகுச் சேவையில் பொதுமக்களுடன் திரும்பிச் செல்லப்போவதாக ஈ.பி.டி.பியினர் கூறியபோதும் பொதுமக்கள் அதற்கு இணங்கவில்லை. இதனால் நேற்றுக்காலை மற்றும் மாலைப் படகுச் சேவைகள் நடைபெறவில்லை.

துறைமுகப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியினர், அங்கு நின்ற பொதுமக்களைப் படம் எடுக்க முனைந்தபோது, பொதுமக்கள் அவர்களைக் கற்களால் தாக்கினர். இதையடுத்து ஈ.பி.டி.பியினர் பொல்லுகளோடு தாக்கவந்தபோதும் அங்கு நின்ற பொலிஸாரினால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதேவேளை - நெடுந்தீவில் பொது மக்களுக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல்நிலை குறித்து கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து நேற்று அங்கு சென்ற மூன்று அதிகாரிகள் நிலைமையை நேரில் ஆராய்ந்தனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி ஒருவர்- நெடுந்தீவுக்கு மீண்டும் ஈ.பி.டி.பியினர் வருவதை அங்குள்ள மக்கள் விரும்பவில்லை என்றும் இதனைத் தம்மால் நேரடியாகக் காண முடிந்ததாகவும் தெரிவித்ததுடன் ஈ.பி.டி.பியினர் அங்கு முகாம் அமைக்க முயலவில்லை என்றும், ஒரு அலுவலகத்தையே திறக்க விரும்புகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் நேற்று நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது- கண்காணிப்புக் குழுவின் அதிகாரி, ஈ.பி.டி.பியினரைப் பிரச்சினை தீரும் வரை வெளியில் நிற்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

நமது ஈழநாடு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை
மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு - 2002
நாளை
யா/வேம்படி மகளிர் கல்லூரியில்
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
ஆறு அமர்வுகளாக நடைபெறும்.
இக்கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை மகிழ்வுடன் வரவேற்கிறோம்.
அனுசரணை:-
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்கில் இணைந்து நீங்களும் பயன்பெறுவீர்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்
பதிவுகளுக்கு முந்துங்கள்
25.11.2002
Dip. In MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Video Mixing
Internet & email
baby dod com
(சிறுவர்களுக்கானது) (சி 190)
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna TP: 021-2222674

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.